பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

பாடியருளிய

குமாரஸ்தவம்

உரையாசிரியர்:

சித்தாந்தச் செல்வர்

பேராசிரியர் டாக்டர் ப. இராமன், எம்.ஏ.,பி.எச்.டி.

தமிழ்த்துறைத் தலைவர்

இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்தா கல்லூரி, சென்னை 4

இந்நூல் வெளியிடப் பொருளுதவியவர்:

என் பி எப் டைப் பவுண்டரி

73 மேடக்ஸ் தெரு சென்னை 7

(2) 3-6

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

பாடியருளிய

குமாரஸ்தவம்

உரையாசிரியர்:

சித்தாந்தச் செல்வர்

பேராசிரியர் டாக்டர் ப. இராமன், எம்.ஏ,பி.எச்.டி.

தமிழ்த்துறைத் தலைவர்

இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்தா கல்லூரி, சென்னை 4

இந்நூல் வெளியிடப் பொருளுதவியவர்:

என் பி எப் டைப் பவுண்டரி

73 மேடக்ஸ் தெரு சென்னை 7

இரண்டாம்பதிப்பு ஜனவரி, 1987 2000 படிகள்

மாண்புமிகு நீதிபதி
கு. சண்முகம்

சென்னை.
15-10-86.

அணிந்துரை

குமாரஸ்தவம் என்னும் இந்நூலுக்கு இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெறும் உரைநூலுக்கும் அணிந்துரை அளிக்கும் வாய்ப்புக்கிடைத்தமைக்குப் பெருமைப்படுகிறேன். இறைவனை வழிபடும் அடியார்கள் இறைவன் புகழ்பாடும் பாடல்களின் பொருள் தெரிந்து ஓதுவது நலம். உள்ளம் ஒன்றி உருகுவதற்கு அது உதவும். பிரணவ பரம்பரை என்று இயம்பப்படுகின்ற முருகனையே பாடி உய்ந்த அடியார்களுள் இரண்டாம் அருணகிரிநாதர் எனப் போற்றப்படும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் பாடல்கள் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ள இயலாதவை. தத்துவம் பொதிந்த பாடல்களாதலால் புரிந்து கொள்வது கடினமே. இத்தகைய பாடல்களுக்குத் தெளிவான விரிவுரை அவசியமே. இந்த அவசியத்தை உணர்ந்து பேராசிரியர் ப. இராமன் அவர்கள் பாம்பனடிகளின் நூல்களுக்குத் தொடர்ந்து உரை எழுதி வருகின்றார். இவர் அண்மையில் குமாரஸ்தவத்திற்கு எழுதிய விளக்க உரை அன்பர்களால் பெரிதும் வரவேற்கப் பட்டது. அதனாலேயே குறுகிய காலத்தில் இரண்டாம் பதிப்பும் வெளியிடப்படுகின்றது. இதனை இலவசமாக வெளியிடும் அச்சகத்தார் எமது பாராட்டுக்குரியவர்.

துதிப்பாக்களின் பொருளை நன்குணர்ந்து அதன் கருத்தில் கலந்து தூய உள்ளத்தோடு மெய்ஞ்ஞான மூர்த்தியான முருகனை வழிபட்டால் இறைவன் திருவடி சேருவது திண்ணம் என்று சமரச சன்மார்க்கம் காண விழைந்த வள்ளலாரும் வலியுறுத்துகின்றார்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து

நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே

நிறைந்து நிறைந்து ஊற்றெழும்

கண்ணீர் அதனால் உடம்பு

நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே

ஞான நடத்தரசே என்று

வனைந்து வனைந்து ஏத்துதும் நாம்

வம்மின் உலகியலீர் !

மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர் என ஊனும், உடலும், உள்ளமும் உருகி உருகிப் பாடுகின்றார். பாம்பனடிகளும்,

''முருகு முருகு முருகு என்று

உருகு உருகு உருகு,'' என்று முருகனைப் பாடிப் பாடி உருக வேண்டுகிறார். இவ்வாறு உள்ளம் உருகுவதற்கு அன்பும் தெளிந்த அறிவும் வேண்டும். அடியார்களின் தூய வழிபாட்டிற்கு உரைநூல் உற்ற 'துணையாகும். அறிவைப் பெருக்கி அன்பை வளரச் செய்யும். அன்பர் பணியே இறைபணியாகக் கொண்டு விளக்க உரை வழங்கும் ஆசிரியர், மெய்யன்பர், உத்தமர் இப்பணியைத் தொடர்ந்து புரிந்திட இறைவன் திருவருளை வழங்கியருள அவன் இணையடிகளை வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

கு. சண்முகம்

3-6

முன்னுரை

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் பாடியருளிய குமாரஸ்தவம் ஒரு சிறந்த மந்திர நூலாகும். குமார + ஸ்தவம் ''குமரன் புகழ்'' என்பது இதன் பொருள். முருகப் பெருமான் ஆறுமுகங் கொண்டு அவதரித்தது முதல் அவன் வள்ளி, தெய்வானையை மணங்கொண்டது, தேவர்கள் தலைவனுயிருப்பது, செந்தமிழ்க் கடவுளாய் இலங்குவது, மயில் வாகனனுய் விளங்குவது, மந்திரத் தலைவனுய் நிற்பது, எல்லா ஆன்மாக்களின் உள்ளும் புறமும் உருவ நிலையிலும் அருவ நிலையிலும் நின்று இயக்கியும் இயங்கியும் வருவது, நடனத்தால் ஐந்தொழில் ஆற்றுவது, எல்லாம் செய்து கொண்டு என்றும் குமரனுயிருப்பது ஆகிய முருகனின் அனைத்துச் சொரூப நிலையும் தடத்த நிலையும் வரை சுவாமிகள் நாற்பத்து நான்கு வரிகளில் பொதிந்து வைத்துள்ளார்கள்.

சுவாமிகள் பாடியருளிய எல்லாத் திருப்பாடல்களையும் ஓதுவதற்கு எவருக்கும் நேரம் கிட்டுவதில்லை. பஞ்சாமிர்த வண்ணம், சண்முகக் கவசம் ஆகிய திருப்பாடல்களை அன்பர்கள் நாள்தோறும் பாராயணம் செய்து நன்மை அடைந்து வருகிறுர்கள். அவற்றையும் ஓத நேரமில்லாதவர்கள் உண்டு. நேரம் கிடைப்பவர்கள் எத்தனை பாடல்களை வேண்டுமானுலும் பாராயணம் செய்யலாம். நேரம் கிடைப்பவர் கிடைக்காதவர் அனைவருக்கும் எளிதாகப் பாராயணம் செய்வதற்கு ஏதுவானது குமாரஸ்தவம். இம்மந்திரம் ஒன்றை ஓதினுல் போதும். முருகப் பெருமானின் அழகு, இளமை, விழா, மணம், தேன் என்னும் விளக்கமும் மேற்கூறப் பெற்ற அளவிலாப் பெருமையும் இதில் அடங்கிக் கிடக்கின்றன. இதனை ஓதுவதால் அவன் திருப்புகழ் முழுதும் ஓதும் பயன் கிட்டும். மேலும் சுவாமிகள் முருகப்பெருமானது புராணமாகப் பாடியருளிய ஸ்ரீமத் குமரசுவாமியம் என்ற நூலில் முதற்பாடலாக இக்குமாரஸ்தவத்தை அமைத்துள்ளார்கள். இத் திருப்பாட்டின் கீழ் பின்வருமாறு சுவாமிகளே குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

''ஸ்ரீமத் குமார சுவாமியத்தில் எப்பாகத்தை யேனுந் தொடங்கு முன்னர் இந்த ஸ்தவத்தைச் சொல்லிக் கொள்ளலாம்'', என்பதாகும்.

முருகப் பெருமானது புராணமாக விளங்கும் ஸ்ரீமத் குமார சுவாமியத்திற்கு வாயிலாக இக் குமாரஸ்தவம் இருப்பதால் அவன் புகழ்பாடும் எந்தப் பாடலுக்கும் இதுவே வாயிலாக விளங்குகிறது. ஆதலால் சுவாமிகள் பாடியருளிய பாடல்களை ஓதத் தொடங்குவோர் முதலில் குமாரஸ்தவத்தை ஓதவேண்டும் என நினைவிற்கொள்ள வேண்டும்.

இக்குமாரஸ்தவத்தைத் தமக்கு வந்த வெப்ப நோய் (சுரம்) நீங்குதற் பொருட்டுப் பாடியருளினர். ஆதலால் இதனை ஓதும் அன்பர்கள் எவ்வித நோயும் நீங்கப் பெறுவர். உடல் நலமும், செல்வமும், புகழும் எய்துவர். மறுமையில் முத்தியும் பெறுவர் என்பது திண்ணம்.

முருகனடியார்கள் அப்பெருமான் உவக்கும் நற்செயல்கள் புரிந்து அவன் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும். அவன் உவக்கும் நற்செயல்களுள் ஒன்று அவன் புகழைப்பாடும் நூல்களை வெளியிடுவதாகும். அத்தகைய போற்றுதற்குரிய திருப்பணியை NPF TYPE FOUNDRY உரிமையாளர்கள் செய்ய மனமுவந்து, முன்வந்து இக்குமாரஸ்தவத்தை இலவசமாக வெளியிடுகின்றார்கள். அவர்களுக்குச் செந்தமிழ்க்கடவுள் எந்த வேளையும் துணை நிற்பான். அவர்களுக்குத் தூண்டு கோலாக இருந்து இப்பணியை நிறைவேற்றச் செய்தவர்களும் எளியேன் மீது அளவிலாத அன்பு கொண்டவர்களும், வேலை வணங்குவதே வேலை என முருக பத்தியில் உருகி நிற்பவர்களும், இந்நூலுக்கு அழகிய அணிந்துரை வழங்கியவர்களுமான சென்னை உயர்நீதிமன்ற மாண்பு மிகு நீதிபதி கு. சண்முகம் அவர்களுக்குத் தலையல்லால் கைம்மாறில்லேன்.

அடியார்கள் குமாரஸ்தவத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு ஓதிச் செவ்வேட் பரமன் திருவருளைப் பெறுவதே அடியேன் அடையும் பெரும் பேறாகும்.

இவண்,

ப. இராமன்.



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்



ஸ்ரீ மயூர நாத பெருமான்

சாலிவாகன சகாத்தம் (1841) நிகழ்காலயுத்தி (கி. பி. 1918) ஆம் வருடம் 7-ஆம் தேதி இடப்பட்ட குமாரஸ்தவமானது தமக்குற்ற வெப்புநோய் நீக்கம் பற்றிச் சுவாமி களால் பாடப்பட்டது. அந்நோயும் நீங்கிற்று. இஃது அருச்சனை புரியும் காலத்தும் சொல்லத் தக்கது.

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

குமாரஸ்தவம்

ஓம்	ஷண்முக	பதயே	நமோ நம :
,,	ஷண்மத	பதயே	நமோ நம :
,,	ஷட்க்ரீவ	பதயே	நமோ நம :
,,	ஷட்க்ரீட	பதயே	நமோ நம :
,,	ஷட்கோண	பதயே	நமோ நம :
,,	ஷட்கோச	பதயே	நமோ நம :
,,	நவநிதி	பதயே	நமோ நம :
,,	சுபநிதி	பதயே	நமோ நம :
,,	நரபதி	பதயே	நமோ நம :
,,	சுரபதி	பதயே	நமோ நம :
,,	நடச் சிவ	பதயே	நமோ நம :
,,	ஷடக்ஷர	பதயே	நமோ நம ;
,,	கவிராஜ	பதயே	நமோ நம :
,,	தபராஜ	பதயே	நமோ நம :
,,	இகபர	பதயே	நமோ நம :
,,	புகழ்முனி	பதயே	நமோ நம :
,,	ஜயஜய	பதயே	நமோ நம :
,,	நயநய	பதயே	நமோ நம :
,,	மஞ்சுள	பதயே	நமோ நம :
,,	குஞ்சரி	பதயே	நமோ நம :

ஓம் வல்லி	பதயே	நமோ நம :
,, மல்ல	பதயே	நமோ நம :
,, அஸ்த்ர	பதயே	நமோ நம :
,, சஸ்த்ர	பதயே	நமோ நம :
,, சஷ்டி	பதயே	நமோ நம :
,, இஷ்டி	பதயே	நமோ நம :
,, அபேத	பதயே	நமோ நம :
,, சுபோத	பதயே	நமோ நம :
,, வியூஹ	பதயே	நமோ நம :
,, மயூர	பதயே	நமோ நம :
,, பூத	பதயே	நமோ நம :
,, வேத	பதயே	நமோ நம :
,, புராண	பதயே	நமோ நம :
,, பிராண	பதயே	நமோ நம :
,, பக்த	பதயே	நமோ நம :
,, முக்த	பதயே	நமோ நம :
,, அகார	பதயே	நமோ நம :
,, உகார	பதயே	நமோ நம :
,, மகார	பதயே	நமோ நம :
,, விகாச	பதயே	நமோ நம :
,, ஆதி	பதயே	நமோ நம :
,, பூதி	பதயே	நமோ நம :
,, அமார	பதயே	நமோ நம :
,, குமார	பதயே	நமோ நம :

முற்றிற்று.

ஓம் குமர குருதாச குருப்யோ நம :

குமாரஸ்தவம்

1. ஓம் ஷண்முக பதயே நமோ நம :

பொருள் : ஆறுமுகத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷண்முகம்...ஆறுமுகங்கள் ; பதயே-தலைவன்; நமோ நம : — வணக்கம், வணக்கம்.

அறுமுகச்சிவத்தின் ஆறு முகங்களாவன ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் என்பன. இவை நோக்கும் திசைகள் : ஈசானம்—ஆகாயம் ; தற்புருடம்-கிழக்கு ; அகோரம்—தெற்கு; வாமதேவம்—வடக்கு ; சத்யோஜாதம்—மேற்கு ; அதோ-முகம்—கீழ்நோக்குதல்.

பரமசிவத்தின் திருமுகங்கள் ஐந்தோடு சக்தியின் திருமுகமும் சேர்ந்து ஆறுயின. சூரனை ஒழிக்க ஒரு மதலை வேண்டிப் பரமசிவத்தைத் தேவர்கள் பணிந்து நின்ற போது அவர் அறுமுகத் தோடிருந்தருளினர். அத்திருமுகங்களின் நெற்றிக் கண்களினின்றும் வெளிப்பட்ட தீப்பொறிகளை அக்கினி பகவானும் வாயு பகவானும் கங்கையிற் சேர்த்தனர். கங்கை ஏந்திச்சென்று சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அப்பொய்கையில் செந்தாமரை மலர்மேல் ஆறு திருமுகங்களுடனும் பன்னிரு திருக்கைகளுடனும் பரமசிவம் குழந்தையாக விளங்கினர். எத்திசையிலும் உள்ளவரைக் காக்கவே ஆறு திருமுகங்கள் கொண்டார்.

குறைவில்லாத் தவத்தைச் செய்தவர் மனத்திலே முருகப் பெருமான் திருமுகங்கள் ஆறும் ஒவ்வொரு காட்

சியை அளிக்கின்றன எனத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் வருணிக்கின்ருர்; அதாவது ஒருமுகம் உலகத்தில் இருள் நீங்கப் பல கதிர்களைத் தோற்றுவிக்கும். ஒருமுகம் அன்பர்கள் துதிக்க அவர்க்கு வேண்டும் பொருள்களை அளிக்கும். ஒருமுகம் வேதங்களிற் கூறிய மந்திர முறைப் படி அந்தணர் செய்யும் வேள்வியில் தீங்கு வராதபடி நினைக்கும். ஒருமுகம் இங்கு வழங்காத வேதங்களிலும் நூல்களிலும் உள்ள பொருள்களை ஆராய்ந்து முனிவர் வியக்கும்படி கூறித் திங்கள் போலத் திசை விளங்க இருக்கும். ஒருமுகம் அவுணர்களாகிய பகைவர்களைக் கொன்று கள வேள்வியைச் செய்ய விரும்பும். ஒருமுகம் வள்ளி யம்மையோடு மகிழ்ச்சியுடன் இருக்கும்.

மேற்கோள் : ''ஐந்துமுகத்தோ டதோமுகமுந் தந்து
திருமுகங்கள் ஆருகி''

— கந்தர் கலிவெண்பா.

'' அறிஞராயோர், சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்.''

''அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய.''
''மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினல் அளக்க ஒணமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந்து அருளினனே.''

—கந்தபுராணம், திரு அவதாரப் படலம்.

வாயு செஞ்சுடர் தாங்கு மாசுடர்கள்
நாய கங்கையி ஞண லோடையிலே
மேய பங்கய வீயி லாறுமுகச்
சேய ஞகிய தேவர் தூவினர்பூ.

—ஸ்ரீமத் குமாரசுவாமியம் ப. 4

2. ஓம் ஷண்மத பதயே நமோ நம:

பொருள் : ஆறு சமயங்களுக்குத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷண்மதம் — ஆறு சமயங்கள்.

மதம், சமயம், மார்க்கம் என்பன ஒரே பொருளுடைய சொற்கள். கடவுளர்களைப் பலவிதமாக வேறுபடுத்தி ஒரு வகையில் வகுத்துக்கொண்டு நாடுவது, அல்லது விடுவது சமயத்தின் பொருள்.

வேதங்களே கடவுளரைப் பேதப்படுத்திக் கூறுகின்றமையால் அப்பேதங்களையொட்டிச் சமயங்கள் தோன்றின. கடவுளரை உருவம், சொரூபம், சுவாபம், விசேடம், வியாத்தி, வியாபகம், குணம், நிறம் ஆகியவற்றால் வேறு படுத்திக் காண்பர்.

வேதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றை ஏற்கும் சமயங்கள் அகச்சமயங்கள் என்றும், ஏற்காதவை புறச்சமயங்கள் என்றும் பெயர்பெறும். புறப்புறச் சமயம், அகப்புறச் சமயம் என அவற்றைச் சார்ந்த சமயங் களும் உண்டு.

அகச்சமயங்கள் ஆறு, அகப்புறச் சமயங்கள் ஆறு, புறச்சமயங்கள் ஆறு, புறப் புறச்சமயங்கள் ஆறு. இந்த நான்கு பிரிவுகளுமே ஆறு ஆறாக இருப்பதால் சமயங்களை அறுவகை என்று கூறுவர். தற்காலத்தில் அறுவகைச் சமயங்கள் என வழங்குவன சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணுபத்யம், கௌமாரம் என்பனவாகும்.

சமயங்கள் பலவும் இறைவனை அன்னை, அப்பன். ஒளி, வெளி, நாதம், நிலயம், அணு, காலம், என்று பலவாறாகத் தமக்குத் தோன்றிய வகையில் கூறும். ''சதாஞான ஆனந்தமாய்க் கருணையாய் உள்ள பரம்பொருள் எத்தனை சமயபேதங்கள் கூறப்படினும் அவை அத்தனையு

மாகியும் அவற்றிற்கு வேருகியும் திருவிளையாடல் புரி கின்றது'' எனத் தாயுமான சுவாமிகள் ஓதுகின்ருர். தனக்குத்தானே மகவாய் வந்த சங்கரனும் ஆறுமுகவன் நான்கு வகையான ஆறு சமயங்கட்கும், பின்னர்க்கிளைத்த எல்லாச் சமயங்கட்கும் தலைவனுவான் என்பதும் இதனுல் பெறப்படும்.

ஆறுசமயங்களும் இறைவனின் ஆறுகுணங்களே என வும் கூறுவர். பரம்பொருளின் ஒளி—சூரியன்; அழித்தல்— ஈசன்; மறைத்தல்—சத்தி; காத்தல்—திருமால்; நிறை வேற்றல்—கணபதி; ஞானமளித்தல்—முருகன். ஆறுமுகனே பரம்பொருளாயிருப்பதால் இவை அனைத்தும் அவனுள் அடங்கும்.

மேற்கோள் :

> ''ஆறுசமயங்கள் எங்கும் ஆனந்தமாய் விளையாடி''
>
> —திருவலங்கற்றிரட்டு,

> ''ஆறுசமயத்தும் அதுஅதுவாய் நின்றிலங்கும்''
>
> —தாயு. பாடல்.

> ''அறுசமய சாத்திரப் பொருளோனே,''
>
> —திருப்புகழ்.

3. ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நம :

பொருள் : ஆறு திருக்கழுத்துக்கள் உடைய தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷட்—ஆறு; க்ரீவ—கழுத்து.

இமயமலையில் சரவணப் பொய்கையில் செந்தாமரை மலர்களின்மேல் அழகுமிக்க ஆறு குழந்தைகள் இருந்தன. தம் குழந்தைகளைக் காணும் ஆர்வமிக்க பார்வதியும் பரம

சிவனும் அப்பொய்கையின் பக்கம் எழுந்தருளினர். குழந்தைகளைப் பார்வதி தேவியார் கார்த்திகை மாதர் களிடமிருந்து வாங்கித் தம் திருக்கரத்தில் ஒன்ருகச் சேர்த் தார். அவ்வாறு சேர்க்கவே ஆறு குழந்தைகளும் ஓர் உருவமாகி ஆறு திருமுகங்கள், பன்னிருகைகள், இரண்டு திருவடிகள் கொண்டு விளங்கின. இவ்வாறமைந்த உருவத்தைக் கந்தன் என்பர். இந்த ஆறு திருமுகங்கள் கொண்ட ஓர் உருவத்தில் ஆறு திருக்கழுத்துக்களும் உண்டு. ஆறுமுகனின் பரமேசுவரத் திருமேனியில் தேவர் களும் சூரபன்மனும் எல்லாப் பொருளையும் கண்டு வியப் படைந்தார்கள். அவர்கள் பார்த்து உவகை கொண்ட உருவத்தில் திருக்கழுத்துக்கள் ஆறிலும் எல்லா ஓசைகளும் இருந்தன. அக்கினியும் இருந்தது. சொற்பிரபஞ்சத் தலைவனுக விளங்கும் முருகப் பெருமானிடம் எல்லா ஓசை களும் காணப்பட்டது இயற்கையே. மேலும் கழுத்து எனும் தானம் விசுத்தியாகும்.

ஓசை நாதத்தையும் அங்கி ஒளியையும் (விந்து) குறிப்பதால் அறுமுகப் பிரமம் நாதவிந்துவாகும் எனவும் உணரவேண்டும். இன்னெருவகையிலும் திருக் கழுத்தின் சிறப்பை நோக்கலாம். பரமசிவம் தேவர்க்கு அமுதளித்துத் தான் நஞ்சை உண்டு கண்டத்தில் அடக் கினுர். அதனல் கண்டம் கருத்து, திருநீலகண்டன், நீலமணிமிடற்றன், காரியுண்டிக்கடவுள் எனப் போற்றப் பெறுகின்ருர். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் வந்த துன்பத்தைத் தான் ஏற்ருர். நன்மையை அவர்களுக்கு அளித்தார். அடியார்க்கு இன்பத்தை அளிக்கத் தான் எப் போதும் துன்பத்தை ஏற்பவர் என்ற இறைவன் பேரருள் திறத்தைத் திருக்கழுத்துக் காட்டுகின்றது. பரமசிவமே முருகனுய்த் தோன்றியதால் அம் முருகன் கழுத்துக்கள் கடவுள் கழுத்திலிருந்து வேறுபட்டவையல்ல என்றும் அதனுல் முருகப்பெருமான் கழுத்துக்கள் அடியார் துன்பம் துடைக்கும் ஆற்றல்வாய்ந்தவை என்றும் நினைந்து நினைந்து மகிழ்ச்சி அடையலாம்.

மேலும் கழுத்தே அழகுப் பொருளேயும், மங்கலப் பொருளேயும் தாங்குகின்ற இன்றியமையாத பெருமைமிக்க அங்கமாகின்றது. இவ்வாறு பார்த்தாலும் அறுமுகன் திருக்கழுத்துக்களே மணமும் அழகும் நிறைந்த செங்கடம்ப மலர்மாலையையும், பல்வேறு வகையான ஒளிவீசும் அணிகலன் களேயும் தாங்கி அழகு செய்கின்றன. இரு தேவியரும் அணிவித்த மங்கலகரமான மணமாலேகளேயும் தாங்கின. அருணகிரிநாதர் முதலான சிறந்த அடியார்கள் சூட்டியஎண்ணிறந்த பாமாலேகளேயும் தாங்கி நிற்கின்றன. அந்தத் திருக்கழுத்துக்கள் ஆறுடைய தலேவனுக்குச் சுவாமிகள் புகழ்மாலே சூட்டுகின்ருர்.

மேற்கோள் :

"ஒல்லொலி அங்கி கண்டம்"

—கந்தபுராணம்.

"அடிமைசொலும் சொற்றமிழ்ப் பனிரொடு
பரிமளம் மிஞ்சக் கடப்பமாலேயும்—அணிவோனே."
"நாயெனுக்கு முறவாகிநின்று
கவிதையைப் புனேவோனே"
"செந்தமிழ்ச்சொல் பாவின் மாலேக்கார"

— திருப்புகழ்.

4. ஓம் ஷட்க்ரீட பதயே நமோ நம:

பொருள் : ஆறு கிரீடங்களே (முடிகளே) அணிந்துள்ள தலேவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷட்—ஆறு; க்ரீட—கிரீடம் (முடி)

இந்திரன் முதலான தேவர்கள் முருகன் பெருமையை முழுவதும் அறியவில்லே. அவர்களுக்கு முருகன் தனது மகாவிசுவருபத்தைக் காட்டியருளினுர். அவர்களால்

முழந்தாள் அளவுதான் காணமுடிந்தது. இந்திரன் முருக னிடம் சூரபன்மனை அழித்துத் தங்களைக் காக்க வேண் டினான். அதற்கு இசைந்தருளினார். உடனே அவனும் மற்ற தேவர்களும் திருக்கயிலாயத்தில் ஒருபால் சென்று பொற்கோயிலை அடைந்தனர். அதன் நடுவே பொன் சிங்காதனம் அமைத்தனர். முருகனை எழுந்தருளச் செய் தனர். வேதக் கடலைக் கரைகண்ட வசிட்டர் உள்ளிட்ட முனிவர்கள் வந்து குழுமி முருகனை வணங்கினர். பின்பு வேதமந்திரங்களை ஓதியபடி ஆகாசகங்கைத் தீர்த்தத்தால் முருகப்பெருமானுக்கு அபிடேகம் செய்தனர். அவன் திருச்சென்னியில் அழகும் ஒளியும் விளங்கும் திருமுடியைச் சூட்டி மகிழ்ந்தனர்.

திருமாலுக்கும் ஏனைய தேவர்களுக்கும் மேலானவர் என்று உணர்ந்தனர். அதனால் தேவசேனைக்குத் தலைவனாக வேண்டினர். அவர் வேண்டுகோளை ஏற்றருளினான். அப் போது திருமாலும், தேவேந்திரனும் மற்றைய தேவர் களும் சேனானீ! (சேனைத்தலைவ!), மகாஜகத்குரு! எனப் போற்றி வணங்கினர். இவ்வாறு தேவர்கள் முடி சூட்டியதுபோல் பரமசிவமும் அறுமுகப் பெருமானுக்கு முடிசூட்டி மகிழ்ந்தார். ஆறுமுகப்பெருமான் சொர்க் கத்தின் சக்கரவர்த்தி. அதனால் சக்கரவர்த்தியின் சின்ன மாக முடிசூடியிருப்பது இயல்புதானே? தேவசேனைக்குத் தலைவனாகவும் மகாஜகத்குருவாகவும் திருமுடியணிந்து கொண்டான். புறப்பகையை ஒழிக்கும் தலைவன். அகப் பகையான அஞ்ஞானத்தை ஒழிக்கும் பரமகுரு. பகைமை நீக்கி, அறியாமையை அகற்றி இன்பத்தை அளிக்கும் சின்னமாக அவன் ஆறு திருமுடிகளும் விளங்கின.

மேற்கோள் :

> ''முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
> மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப.''
>
> —திருமுருகாற்றுப்படை. 84-85

இந்த்ர கோட்டிம யக்கத் தான்மிக
மந்த்ர மூர்த்தமெ டுத்துத் தாமத
மின்றி வாழ்த்திய சொர்க்கக் காவல வயலூரா''

—திருப்புகழ்.

''சென்னி யாறுள தேவனளித்த
சென்னியாறுள தேவை வணங்கி''

—கந்தபுராணச் சுருக்கம்.

''கோலே றுங்குக னுக்கபி டேகமிழைத்
தேலே றம்முடி யுஞ்சிர சிட்டறைவார்.''

—ஸ்ரீமத் குமாரசுவாமியம்.

''சிவபால பைம்பொன் முடியாறும் மன்னும்
சிகரங்கள் மின்னும் எழிலும்.''

—குமரகுருதாச சுவாமிகள் பாடல்.

5. ஓம் ஷட்கோண பதயே நமோ நம :

பொருள் : அறுகோணச் சக்கரத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷட்கோணம்—ஆறுகோணம்.

தகடுகளில் தெய்வங்களுக்குரிய மந்திரங்களை எழுதுவர். இதனை யந்திரஸ்தாபனம் என்று கூறுவர். எழுத்துக்கள் அமைய வேண்டிய இடம் அறிந்து தகட்டில் அமைக்கவேண்டும். இடம் மாறினால் பொருள் மாறுபடும். பொருள் மாறுபட்டால் பயனும் மாறுபடும்.

யந்திரங்களைச் சக்கரம் எனக் கூறுவது வழக்கம். இச் சக்கரங்களில் அவரவர் வழிபடும் தெய்வங்களுக்குரிய

மந்திரங்களை எழுதி வழிபட்டுப் பயனடைவர். அதனால், வீடுகளிலும், அங்காடிகளிலும், நிறுவனங்களிலும், பூசை அறைகளிலும் சக்கரங்கள் இடம்பெறுகின்றன. திருக் கோயில்களில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யும்போது பீடத்தில் சக்கரம் அமைக்கிறார்கள். அதனால் விக்கிரகத் திற்குத் தெய்வசக்தி ஏற்படுகிறது என்பர். இவ்வாறு பல வகையிலும் சக்கரங்கள் சக்தியை ஊட்டிக்கொண்டிருக் கின்றன.

அறுமுகச்சிவமான முருகப் பெருமானுக்குரிய திருவா றெழுத்தும் ஸ்தாபிக்கப் பெறும் யந்திரம் அறுகோணச் சக்கரமாகும். சரவணபவ எனும் மந்திரத்தையோ அல்லது குமாராய நம: எனும் மந்திரத்தையோ அறு கோணத்தில் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கப் பெற்ற சக்கரத்தில் முருகன் எழுந்தருளுவான். இச் சக்கரத்தையே கோயிலாகக் கொள்வான். இதனை நம் சுவாமிகள் சண்முகசகச்சிர நாமத்திலும் குறிப்பிட் டுள்ளார்.

ஸ்ரீமத் சுவாமிகள் பல விசித்திர கவிகளும் சித்திர கவிகளும் பாடியுள்ளார். அவற்றுள் வேலையும் மயிலையும் பற்றிப் பாடியுள்ள சித்திரகவிகள் சிந்திக்கத் தக்கவை. ஐம்பத்தைந்து எழுத்துக்களில் வேலைப் பாடியுள்ளார். வேலுருவம் எழுதி ஐம்பத்தைந்தில் முப்பது எழுத்தை அடக்கியுள்ளார். இதற்குச் சஸ்திரபந்தம் என்று பெயர் சூட்டியுள்ளார். மயிலைப்பற்றி நூறு குற்றெழுத்துக் களில் பாடியுள்ளார். மயிலுருவத்தில் இப்பாடலை அறு பத்து நான்கு எழுத்துக்களுள் அடக்கியுள்ளார். இதற்கு மயூரபந்தம் எனப் பெயர். அறுமுகனையே வழிபடும் அடியார்களுக்கு வேலும் மயிலும் துணையன்றோ? அதனால் வேலாயுதக் கடவுளின் சக்கரங்களாக இவற்றையும் பூசித்துப் பயன் அடையலாம்.

மேற்கோள் :

ஷட்கோண மத்ய நிலயாய நம:



இஃது அறுகோணச்சக்கரம், இங்குள்ள முறையில் மந்திர எழுத்துக்கள் அமையவேண்டும். இச் சக்கரத்தை முருகன் தனது கோயிலாகக்கொண்டு இதன் நடுவில் எழுந்தருளுவன்.

6. ஓம் ஷட்கோச பதயே நமோ நம :

பொருள் : ஆறு தோத்திர நூல்களின் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஷட்கோச—ஆறு நூல்கள்.

அறுமுகப் பெருமானின் புகழை எத்தனையோ அடியார் களும் பிரணவ பரம்பரையினரும் பாடிப் பரவியுள்ளனர். இருப்பினும் அவனுக்குரிய தோத்திர நூல்களாகக் கூறப் படுவன ஆறு. அவை நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையும் அருணகிரிநாதப் பெருமான் பாடிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு என்பவையும் ஆகும்,

அண்டாபரணன், உக்கிரன் எனும் பூதங்களால் திருப் பரங்குன்றத்தில் ஒரு குகையில் நக்கீரர் சிறைப்பட்டார். அப்பூதங்களினின்றும் விடுபட நக்கீரர் செவ்வேட் பரமனைக் குறித்துப் பாடினார். அதுவே திருமுருகாற்றுப்படை.

இந்நூலுள் செவ்வேட் பரமனிடம் பேரின்பம் பெற்ற அடியார் ஒருவர் மற்ெருரு அடியாரை முருகனிடம் ஆற்றுப்படுத்துகின்ருர். பேரின்பத்தை நல்கும் பெருமானின் ஆறுபடை வீடுகளும், ஆறு திருமுகங்களும் பன்னிரு கைகளும், சிறப்பாக வருணிக்கப்பெறுகின்றன. முருகப்பெருமான் எங்கும் நிறை பரம்பொருள் என்பதும் எளிவந்த பிரான் என்பதும் அழகுற விளக்கப்படுகின்றன. கடைச்சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரர், அவர் செந்தமிழுக்குச் செவ்வேள் உவக்காது இருப்பானு?

அருணகிரிநாதப் பெருமான் அருணையில் கம்பத்து இளையனுரால் ஆட்கொள்ளப்பெற்றவர். ஞானுேபதேசம் பெற்றவர், தொழுநோய் நீக்கப்பெற்றவர், ஜெபமாலை பெற்றவர். அப்பரமன் 'முத்தைத்தரு' என அடியெடுத்துக் கொடுக்கச் சந்தக்கவி மழை பொழிந்தவர். 'வாக்குக்கு அருணகிரி' என்ற வாக்கிற்கு உரியவர். முருகப்பெருமான் பெரும்புகழைத் திருப்புகழாகப் பாடியவர். இவர் நூல்கள் ஐந்தும் முருகன் பெருமையை விதந்து ஓதுவன. இவர்போல் முருகன் பெருமையை எவர் பாடினுர்? ஆதலால் கந்தவேள் சந்தப்பாவிற்கு மனமகிழ்வான் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமத் சுவாமிகள் தாம் பாடியருளிய திருப்பாடல்கள் 6666ஐயும் ஆறு மண்டலங்களாக வகுத்துள்ளார். இங்கு ஆறு நூல்கள் என்பதற்குச் சுவாமிகளின் ஆறு மண்டலங்களையே கூடப் பொருளாகக் கொள்ளலாம்.

மேற்கோள் :

கந்தவேளின் திருமுகங்கள் ஆறு; அவன் அவதரித்த இடம் கங்கை ஆறு; அவன் தங்கிய படைவீடு ஆறு; உரிய நூல்கள் ஆறு; அவனுக்குரிய மந்திர எழுத்துக்கள் ஆறு என விளக்கும் பாடல் ஒன்று கந்தரந்தாதியில் தனிச் செய்யுளாகக் காணப்படுகிறது. அதனைக் காண்க.

''ஆறு கொலாம் அவர்தம் திருமாமுகம்
ஆறு கொலாம் அவர்தோற்றிய ஓரிடம்
ஆறு கொலாம் அவர்தானமும் நூல்களும்
ஆறு கொலாம் அவர்மந்திரம் தாமே''

7. ஓம் நவநிதி பதயே நமோ நம:

பொருள். ஒன்பது வகையான செல்வங்களுக்கும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: நவம்—ஒன்பது: நிதி—செல்வம்.

ஒன்பது வகையான செல்வங்கள் 1. மகாபதுமம், 2. பதுமம், 3. சங்கம், 4. மகரம், 5. கச்சபம், 6. முகுந்தம், 7. குந்தம், 8. நீலம், 9. கவசம். என்பனவாகும். இச் செல்வங்கள் ஒன்பதனுக்கும் தலைவனுயிருந்து அன்பர்களுக்கு அவற்றை வழங்கும் வள்ளல் அறுமுகப் பெருமான். பொதுவாகக் குபேரனை நவநிதிக் கிழவன் என்று கூறுவர். ஆனல் உலகில் உள்ள எல்லாச் செல்வங்களுக்கும் தலைவன் முருகப்பெருமானே. தேவ மணிகளுள் இவன் சிந்தாமணி ஆவன். குதிரைகளில் இவன் உச்சைச் சிரவம் ஆவன். பசுக்களில் இவன் காம தேனு ஆவன். யானைகளில் இவன் ஐராவதம் ஆவன். நதிகளுள் கங்கை ஆவன். இவ்வாறு எல்லாச் சிறந்த செல்வங்களும் இவனே. செல்வத்தில் சிறந்தவர்களில் இவன் விச்சிரவா முனிவரின் புதல்வன் குபேரன் ஆவன். திக்குப் பாலகர்களில் இவன் எல்லா இன்பங்களையும் வழங்கும் ஈசானன் என்னும் வடகிழக்குத்திசைப் பாலகன் ஆவன்.

எந்தப் பொருள்களாவது மகிமை, இலக்குமிவிலாசம், தார்டியம் என்பவற்றை உடையனவாக விளங்கினல்

அவற்றில் கந்தக்கடவுள் மகிமை இருக்கும். ஆகையால் நவநிதிக்கும் அவன் தலைவன் என்பது இயற்கையே.

மேற்கோள் :

நீர்வள மார்பரங் குன்றிலு நீடெழி னிமிர்திருச் செந்திலிலும்
சீர்வள மார்திரு வேரகந் தன்னிலுந் நீதறு பழநியிலும்
ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு மிருந்தடி நினைவார்க்குப்
பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

—திருவலங்கற்றிரட்டு.

''தேடக்கிடையாத செல்வமுடை யானை இனிக்
கூடிநனி வாழ்வேனே கூருய்நீ பொன்மயிலே.''

—பொன்மயிற்கண்ணி.

8. ஓம் சுபநிதி பதயே நமோ நம :

பொருள் : பேரின்பச் செல்வத்திற்குத் (முத்தியின்பம்) தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : சுபம் + நிதி—மங்கலச்செல்வம், பேரின்பச் செல்வம். (முத்தி)

இறைவன் எண்குணத்தான். அறுமுகச் சிவன் தன் வயத்தனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றும் உணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனும் குணங்கள் ஆறையும் ஆறு திருமுகங்களாகக் கொண்டான் எனக் (''மூவிருகுணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்ததென்ன'')கந்தபுராணம் கூறும். இக்குணங்களுள் வரம்பிலின்பமுடைமையும் ஒன்று. இறைவனது இச்சை, ஞானம், கிரியை என்பவற்றுள்

இங்கு இச்சையே பேரின்பம் எனக் கூறப்படுகிறது. ஆன்மாக்கள் சிற்றின்பத்தை உடையன. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்கள் வேடர்கள். உயிரைச் சிற்றின்பத்திற் செலுத்துபவர்கள். ஐம்புலன்களால் பெறுகின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் இன்பங்கள் கணப்பொழுதில் மறைந்துவிடுகின்றன. அழியும் இன்பங்களின் முடிவு துன்பமாகவே இருக்கிறது. உயிர்கள் அறியாமையில் உழலும் வரை புலன்வழி நுகரும் இன்பங்களையே பெரிதாக நினைக்கின்றன. அறியாமை நீங்கி ஞானம் அடையும் உயிர்கள் இறை இன்பத்தை நுகரத் தொடங்குகின்றன. அவ்வின்பம் என்றும் அழியாத இன்பமாக இருப்பதை உணருகின்றன. இந்த அனுபவம் வந்தபோது இனியதேனும் புளித்துக் கரும்பும் துவர்த்து முற்றும் கசக்கின்றது.

ஆறுமுகன் பேரின்ப வடிவினன். சத்தெனப்படும் சிவத்திடத்திலும் சித்தெனப்படும் தேவியிடத்திலும் புத்திரப் பெயர் பூண்டுவந்த ஆனந்தப்பொருள் அறுமுகன் எனச் சுவாமிகள் பாடிமகிழ்வர். அருள் ஒளியில் ஞான மலையின் உச்சியில் கருணையால் விளைந்த ஆனந்தத் தேன் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த் தித்தித்திருக்கும் அமுது. எல்லா உலகங்களையும் மோதி அலைக்கும் பரமானந்தக் கடல். இப் பரமானந்தக் கடலில் உயிர்கள் உப்புந்நீரும் கலப்பதுபோல் கலந்திருத்தலே முத்தியின்பம். அம்முத்தித் தலைவனே முத்துக்குமரன்.

மேற்கோள் :

> **"விரும்பிய உள்ளம் வெளியுறக் கண்டபின்**
> **கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே."**

—திருமந்திரம்.

''பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினல் மெல்ல மெல்லவுள்ள
அரும்பும் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்த வன்றே
கருப்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.''

—கந்தரலங்காரம்.

''முந்திக்கொரு வித்துக்குருபர எனஓதும்.''

—திருப்புகழ்.

9. ஓம் நரபதி பதயே நமோ நம:

பொருள் : அரசர் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : நரர்—மண்ணுலக மக்கள். பதி—அரசன்.

மண்ணுலகில் வாழுகின்ற மக்களுக்கு அரசராக விளங்குவோர் நரபதி எனவும் அழைக்கப் பெறுவர். கடல் சூழ்ந்த இம் மண்ணுலகத்தைச் சிறியனவாகவும் பெரியனவாகவும் பிரித்துப் பல நாடுகளாக ஆக்கியுள்ளனர். இந் நாடுகளை ஆளுகின்ற அரசர்களும் பலராவர். இந் நரபதிகள் பலருக்கும் மேலான தலைவன் ஒருவன் இம் மண்ணுலகில் இல்லை நரபதிகளுக்கும் சுரபதிகளுக்கும் மேலான பரமபதி அறுமுகன் ஒருவனே. ஆதலால் மண்ணுலக அரசர்களுக்கெல்லாம் தலைவன் என்று போற்றப்படுகின்றான்.

முருகன் நரபதி என்பதற்கு உக்கிரகுமாரன் வரலாற்றையும் சான்றாகக் கூறலாம். சோமசுந்தரருக்கும் தடாதகைப் பிராட்டிக்கும் குமரனே மகவாய்த் தோன்றினன். உக்கிர குமார பாண்டியன் என்பது அவன் திருப்பெயர். தொண்ணூற்றாறு அஸ்வமேத யாகம் புரிந்தான். இந்திரன்

ஏவலால் வருணன் கடலைப் பொங்கச்செய்து மதுரையை அழிக்க முயன்றான். தனது வேலை எறிந்து கடலையே இவன் சுவறச் செய்தான். இவன்மீது இந்திரன் போர் தொடுத்தான். தனது வளையை எறிந்து அவன் முடியைச் சிதைத்தான் மேருமலையைத் தன் செண்டால் அடித்துச் செருக்கை அடக்கினான். இத்தகைய வீரம் விளைத்து விண்ணுலக அரசனுக்கும் மண்ணுலக அரசனுக்கும் தலைவனாக விளங்கினான். தனது ஆட்சிக் காலம் முடிந்தவுடன் உக்கிரகுமார பாண்டியன் திருக்கோயிலுள் புகுந்தான். தான் வந்த பழைய ஒளியில் இரண்டறக் கலந்தான்.

அருணகிரிநாதரும் உக்கிரகுமார பாண்டியனே முருகன் என்றும் அவனே மேருமலையைச் செண்டாலடித்தான் என்றும் பாடுகின்றார். அரசருள் அதிபதி எனப் புகழ்கின்றார்.

மேற்கோள் :

''நவநிர நிசய பூரண வின்ப ஞானநோக்கருளிய மதுரைச்
சிவனடி நிழலில் பிளப்பறப் பழைய தேசொடு நிறைந்து
வீற்றிருந்தான்''

—திருவிளையாடற் புராணம்.

''மகமேரு, செண்டு மோதின ராசரு ளதிபதி''

''வேந்த குமார குக சேந்த மயூர
வடவேங்கட மாமலையில் உறைவோனே''

திருப்புகழ்.

10- ஓம் சுரபதி பதயே நமோ நம:

பொருள் : தேவர்கள் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : சுரர்—தேவர்கள்: பதி—தலைவன்.

முருகப்பெருமான் தேவர்கள் தலைவர்களுக்குத் தலைவன் ஆவன். அறுமுகச்சிவன் ஐந்தொழில்களைச் செய்வதற்கு ஐந்துமூர்த்திகளையும் படைக்கின்றான். படைப்பின்போது கூடவே தோன்றிய ஆதிமூர்த்திகளான இந்திரன், வருணன், மித்திரன், அரியமன், ஈசானன், இயமன், அக்கினி, வாயு, சூரியன், சோமன், பிரகஸ்பதி ஆகியோர்களுக்கு வேண்டிய திறமைகளையும் அவனே வழங்கியுள்ளான். இத்தகைய மேலான தேவர்களுக்கும் ஐந்து மூர்த்திகளுக்கும் அவன் தலைவன். அதனால் அவன் மகாதேவன்.

பரதகண்டத்தில் குகத்தலங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் பதினெட்டுத் தலங்கள் சிறந்தவை. அவை, இந்திரநீலம், கனகலம், பொதியமலை, பழநிமலை, (திருவாவினன்குடி) சுவாமிமலை (திருவேரகம்) விசாகப் பட்டினம் (விசாகபவனம்) திருப்பரங்குன்றம், குமார தாரை, சந்தனுசலம் (திருச்செந்தூர்) தண்டகவனம், கதிர்காமம், சையச்சித்தம், திரிகூடாசலம், குமாரவனம், சிங்கிபேரிபட்டினம், விருத்தாசலம், மூகாம்புரி, துங்க பத்திரோத்தரம் என்பனவாகும். இவற்றுள் ஒன்றான இந்திரநீலம் என்ற தலத்தில் தேவர் தலைவர்கள் முருகக் கடவுளுக்கு அபிடேகம் செய்து தலைமை ஏற்க வேண்டினார்கள். அதன் வரலாறு பின் வருமாறு ;

இமயமலையின் பக்கத்தில் உள்ளது இந்திரநீலம் என்னும் பெரிய நகரம். அது பல வளங்களை உடையது.

அங்கு மும்மூர்த்திகளும் காவல் கொண்டிருப்பர். ஒரு சமயம் விட்டுணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாம் ஒருங்கு கூடினர். அழகிய மண்டபத்தில் ஒரு பொற்சிங்காதனத்தில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்தனர். ஆகாய கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களினுல் அபிடேகம் செய்வித்தனர். மணிமுடி சூட்டினர். பூமாரி பொழிந்தனர். வேதமங்கள வாழ்த்துக்கூறிக் குமாரக் கடவுளைப் பூசித்தனர். பெருமான் கருணைகூர்ந்து, ''தேவிர்காள்! நுமக்கு என்ன வேண்டும்?'' என்ருர். விட்டுணு முதலியோர், ஐயனே! தேவரீர் எங்கள் எல்லோருக்கும் தலைவராயிருந்து எங்களுக்கு வரும் துன்பங்களை நீக்கிக் காத்தருளவேண்டும்'' என்று வேண்டினர். பெருமான் அத் தேவர்களுக்கு அவ்வாறே வரமளித்தருளினுர், அதனுல்தான் சுவாமிகள் சுரபதிபதயே என வணங்குகின்ருர்கள்.

மேற்கோள் :

> ''பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
> வேளைச்சுர பூபதி மேருவையே''
> ''சூர்வேரொடு குன்று தொளைத்தநெடும்
> போர்வேல புரந்தர பூபதியே''
> ''வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப் பாதா''

—கந்தரநுபூதி.

> ''ஜெயஜெய ஹரஹர தேவா சுராதிபர்-தம்பிரானே.''
> ''தேவதேவ தேவாதிதேவ-பெருமாளே.''

—திருப்புகழ்.

11. ஓம் நடச்சிவ பதயே நமோ நம:

பொருள் : நடனம் ஆடும் சிவனுகிய தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் ; நடம்—நடனம்; சிவம்—அறுமுகச்சிவம்.

சிவன் மூவகை நடனங்களை ஆடுகின்முன். அவை சந்தியா நடனம், தாண்டவ நடனம், அனவரத தாண்டவம் என்பன. சிதம்பரத்தில் நடராசப்பெருமான் ஆடுவதே அனவரத தாண்டவம் எனப்படும். சிதம்பரம் என்பது சித்+அம்பரம். அதாவது ஞான ஆகாசம். ஞான ஆகாசப் பெருவெளி அல்லது பரமாகாசத்தில் நின்று பரமசிவம் ஆடுகின்முர். இதுவே அண்டத்தில் ஆடுவது. விராடபுருடனுக்கு இருதயத்தானம் சிதம்பரம். அதாவது அண்டத்திலாடும் பரமசிவம் இச் சிதம்பரத்தில் நின்முடுகின்முர். அதைப் போலவே தேகமாகிய பிண்டத்தில் இதய குகையில் நின்று ஆடுகின்முர். அதனுல் அவருக்குக் குகேசன் என்று பெயர். அண்டத்தின் இதயமான சிதம்பரத்திலும் பிண்டத்தின் இதயமான சிற்றம்பலத்திலும் (சிறுசபை—இதயகுகை) நடிப்பவன் குகேசனே.

அவன் அனவரத தாண்டவத்தின் மூலம் ஐந்தொழில்களையும் நடத்துகின்முன், சக்தியும் சிவனும் பிரிவின்றி இருத்தலால் இந்த அற்புதம் நடக்கின்றது. அவனது திருமுடியும், திருக்கரங்களும், திருவடியும் திருவாசியைத் தொட்டுக் கொண்டிருக்கின்றன. திருவாசி என்ற சக்தியும் அட்சரம் எனும் சிவமும் இணைந்துள்ளனர். சிவனது தமருகக் கரத்தில் படைத்தலும், அமைத்த பொற்கரத்தில் காத்தலும், அக்கினிக் கரத்தில் அழித்தலும் நிகழ்கின்றன. ஊன்றிய திருவடியில் மறைத்தலும், தூக்கிய திருவடியில் அருளலும் நடைபெறுகின்றன. இவ்வாறு அறுமுகச்சிவம்

இயங்குவதும் இயக்குவதும் இந்நடனத்தால் காண் கிறும்.

இச் சிதம்பரத்தில் சிவன் தன் அன்பர்களுக்காக ஆடிக் காட்டினுன். அதுபோன்றே அறுமுகனும் தன் அன்பர் களான புலிக்கால் முனிவர், பதஞ்சலிமுனிவர் ஆகியோர்க்கு இத் தலத்தில் காளி கூட்டம், பேய்க்கூட்டம் சூழப் பிரமிக்கும்படி நடன தரிசனம் காட்டியருளினுன்.

அருணகிரிநாதப் பெருமானுக்குக் கொடுங்குன்றம், திருத்தணிகை, திருச்செந்தூர் ஆகிய தலங்களில் நடன தரிசனம் காட்டியருளினுர். அதனுல்தான் சுவாமிகள் குகேசனை நடச்சிவம் எனப் போற்றினுர்கள்.

மேற்கோள் :

''செந்திலிலு மென்றன்முன் கொஞ்சிநட னங்கொளுங்—
கந்தவேளே''

''அழகு திருத்தணிமலையில் நடித்தருள் பெருமாளே''

''தணிகைமலை தனில்மயிலில் நிர்த்தத்தில் நிற்கவல
பெருமாளே''

''அகுகுகு குகுவென ஆளி வாய்ப்பல
அலகைக ளடைவுட னுடு மாட்டமும்
அரனவ னுடனெழு காளி கூட்டமும் அகலாப்ூ
அரிதுயில் சயனவியாள மூர்த்தனும்
அணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனும்
அரிதென முறைமுறை ஆடல்காட்டிய பெருமாளே.''

—திருப்புகழ்.

''இதய பங்கய குகர மேதுகை
என்ப தாரிய பாடையில்

அதனு ளாய சிதம்பரத்துளி
அமல ஞானவின் மெய்யனுச்
சதத முஞ்சுக நடனமேபுரி
தம்பிரானை ஓர் குகனெனக்
கதறு மாமறை அவனை அன்றொரு
கடவுள் நாமறி யோமரோ,''
''சராசர மெலாநிறை பராபர சதாநடன
சண்முகா னந்த சிவமே,''

—பாம்பனடிகள்

12. ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம:

பொருள்; ஆறெழுத்துத் தலைவனுக்கு வணக்கம்,

விளக்கம். ஷட்—ஆறு; அக்ஷரம்—எழுத்து.

சரவணபவ எனும் திருவாறெழுத்தே ஷடக்ஷரம் எனக் கூறப்படுகின்றது. 'குமாராயநம' என்பதும் மந்திரம்தான். இதனை வடமொழி மந்திரம் என்று கூறுவர். மந்திரம் என்ற சொல், மந்—நினைப்பவனைத்; திரம்—காப்பது, எனப் பொருள்படும். ஆதலால், சரவணபவ எனும் முருக மந்திரம் அடியார்க்கு நினைத்த வற்றை எல்லாம் அளித்துக் காப்பது என்று உணர வேண்டும்.

சுவாமிகள் தமது திருப்பாடல்கள் 6666-னிலும் பல பாடல்களில் இம்மந்திர மகிமையை விரிவாகக் கூறியுள் ளார்கள். சுப்பிரமணியரைக் குறித்த வியாசத்திலும் விளக்கியுள்ளார்கள்.

எல்லாத் தேவர்களுக்கும் இறைவனுக விளங்கும்அறு முகன் திருப்பெயரே வீடுபேற்றை அளிக்கவல்லது. ஆதலால் ஏனைய மந்திரங்களிலும் முதன்மையானது. பக்தியும் ஞானமும் அடியார்களிடம் பரவச் செய்யும் வழிகள் எத்தனையோ உள்ளன. ஆனல் ஞானிகள் விரும்பும் வீடு பேற்றை எளிதாக அளிக்க வல்லது சரவணபவ மந்திரமே. குகேசனின் திருவடிகளைப் பூசித்துச் சரவணபவ மந்திரத்தைச் சொல்லி வந்தால் ஆணவமலம் ஒழியும். இவ்வுலகில் பரப்பிரம வாழ்வுகிட்டும். ஒருக்கால் நரகமே வாய்க்கினும் அதிலிருந்தும் காப்பாற்றுவது சரவணபவ மந்திரமே. இவ்வுலகில் எவ்வித இடர் வரினும் இம் மந்திரமே காப்பாற்றும். குகேசனது திருவடிகளையே சரணடைந்து இம்மந்திரத்தை ஓதுவோர்க்கு எக்காலத்திலும் மனக் கவலையை மாற்றும் மருந்தாக உதவும். ஐம்பூதங்களிளுலும், இரவு பகலிலும் அடியவர்க்கு வரும் துன்பங்களை நீக்கிக் காப்பது இம் மந்திரமே. எமனும், அவன் தூதர்களும் கூரிய ஆயுதங்களை வீசி வெகுண்டு வரும்போது துணைபுரிந்து காப்பது சரவணபவவே. தேவனும் தேவியும் சேர்ந்த வடிவமே ஆறுமுகத் திருவடிவம். இவ்வுண்மையை உணர்ந்து இம்மந்திரத்தை ஓதுவார்க்கு மரணம் வராமல் தடுக்கும்.

ஐம்பூதங்களையும் படைத்து அவையாகவும் இருக்கின்றவன் திருப்பெயர்; கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, கீழ், மேல் எனும் ஆறு திசைகளிலும் நிறைந்திருக்கின்றவன் திருப்பெயர்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனும் ஆறுதாரங்களில் இருக்கின்றவன் திருப்பெயர். வேதம், ஆகமம், புராணம் நீதிநூல்கள், அறநூல்கள் ஆகியவற்றில் உயர்வாக விளங்குவதும் இத் திருப்பெயரே. நம, ஸ்வதா, ஸ்வாஹா, வஷட், வௌஷட், பட், ஹும்பட், எனும் மந்திரங்கள் ஏழுகோடிக்கும் மேலான மந்திரம் இவ்வா

றெழுத்தே வசியம், அழைப்பு, மோகனம், தம்பனம், உச்சாடனம், மாரணம் எனும் எட்டுக் கருமங்களைச் செய்யும் மந்திரங்களில் தங்கி மூல மந்திரமாக இருப்பது சண்முகனின் சரவணபவவே. தேவர்கள், விஞ்சையர், கந்தருவர், சித்தர், முனிவர் ஆகியோர் இன்பத்தை அடைய அருள்புரிந்தது இம்மந்திரமே.

அகத்திய முனிவர், அருணகிரிநாதமுனிவர், ஸ்ரீமத் குமரகுருதாச முனிவர் அனைவருக்கும் ஞானக்கண் அருளியதும் இச் சரவணபவவே.

ச—மங்களம்; ர—ஒளி, கொடை; வ—சாத்வீகம்: ந—போர் (நலம்தரும் போர்); பவ—தோன்றியவன். சரம்—நாணல்: வநம்—நீர். நாணல் சூழ்ந்த பொய்கையில், பவன்—தோன்றியவன்.

ஓம் நமச்சிவாய எனும் மந்திரமே சரவணபவ எனும் மோட்ச மந்திரமாக அமைந்துள்ளது இம் மந்திரத்தைப் போல் வேறொரு மந்திரமில்லை. இம் மந்திரத்தை ''ஓம் சரவணபவ க்ரீம்'' என்று உச்சரிக்கவேண்டும் எனச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்கோள் :

''தற்பர மாவது சரவணபவவே.''
''முக்திதந் தனுதினம் முழுப்பல னளிக்கச்
சத்திய மாவது சரவண பவவே''
''சாவினைத் தடுப்பது சரவண பவவே''

—திருவலங்கற்றிரட்டு.

''முருகஷ டாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி''
''குதலை வாய்க்குரு பரச டாக்ஷர''
''உலப்பின் ருறெனு மக்கரமும்''

—திருப்புகழ். 990, 108, 264.

13. ஓம் கவிராஜ பதயே நமோ நம:

பொருள் : கவியரசர் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : கவிராஜ—கவியரசர்.

தமிழ்ச் சங்கப் புலவர் முருகவேள். தமிழ் மொழிக்கு முதன் முதல் இலக்கணம் வகுத்தவர் அகத்தியமாமுனிவர். அவருக்குத் தமிழ் மொழியில் ஏற்பட்ட ஐயங்களை நீக்கித் தெளிவுபெறச் செய்தவர். தலைச்சங்கத்தில் அகத்தியமா முனிவர் உள்ளிட்ட ஐந்நூற்று நாற்பத்தொன்பது பெரும் புலவர்கள் முருகவேளின் கீழ் தமிழாய்ந்தனர். அகத்திய மாமுனிவர் மாணுக்கரே தொல்காப்பிய இலக்கணம் இயற்றிய தொல்காப்பியர்.

கடைச்சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரர். இவருளிட்ட நாற்பத்தொன்பது பெரும்புலவர்கள் தமிழாய்ந்தனர். முருகப்பெருமான் திருவருளால் பிழைத்தவர். திருமுருகாற்றுப்படையில் செந்தமிழ் வேலனைப் புகழ்ந்து பாடுகின்றூர். இவரும் ஏனைய சங்கப் புலவர்களும் இறையனூர் அகப்பொருளுக்கு உரை வகுத்தனர். எவர் உரை சிறந்தது என அறியமுடியாமல் மயங்கினர். மதுரையில் உப்பூரி குடிகிழார் மகன் உருத்திரசன்மன் என அபர சுப்பிரமணியராகக் கந்தவேள் அவதரித்தார். அவருக்கு ஐந்தே வயது. ஊமைப் பிள்ளை. அவர் உயர்ந்த ஆசனத்திலிருக்க இச் சங்கப் புலவர்கள் கீழே அமர்ந்து தத்தம் உரையை வாசித்தனர், உருத்திரசன்மர் தமது அங்க அடையாளத்தின் மூலம் நக்கீரர் உரையே சிறந்தது என உணர்த்தினூர். புலவர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.

இத் தமிழ்ச்சங்கக் கவியரசர்களுக்கெல்லாம் பேரரசன் முத்தமிழ் விநோதன் முருகனன்றோ ?

திருஞானசம்பந்தசுவாமிகளும் அபரசுப்பிரமணியரே. மதுரைநகரில் அமணர்கள் அனல் வாதம், புனல் வாதம் செய்தனர். ஆளுடைபிள்ளையின் ஏடு அனலில் வேக வில்லை. புனலை எதிர்த்து நீந்தியது. இதனால் அமணர்கள் தோற்றனர். இங்கும் அபரசுப்பிரமணியக் கவிச் சக்கர வர்த்தியாகத் திகழ்கிறார்.

உலகம் உவப்ப' என நக்கீரருக்கும், 'முத்தைத்தரு' என அருணகிரிநாதருக்கும், 'கங்கையைச் சடையிற் பரித்து' எனக் குமரகுருதாச சுவாமிகளுக்கும் அடி யெடுத்துப் பாடச் செய்து கவியரசர்களாக அவர்களை ஆக்கியவனும் முத்தமிழ் முழுதும் உணர்ந்த வேளே, முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் முருக வேள் கவியரசர்களுக்கு எல்லாம் அரசன் என்பதில் ஐய முண்டோ ?

மேற்கோள் :

''கல்லசல மங்கை எல்லையில் விரிந்த
கல்விகரை கண்ட—புலவோனே''
''அனலிற் புனலிற் கனத்தசொலைப்
பதித்தெழுதிப் புகட்டதிறற்—கவிராசா''
''உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உரைபுகலி யூரிலன்று—வருவோனே''

—திருப்புகழ்.

14. ஓம் தபராஜ பதயே நமோ நம:

பொருள்: தவத்தினருக்கு அரசான தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: தபஸ்—தவம்; ராஜ—அரசன்.

தவம் எனும் தமிழ்ச்சொல்லை வடமொழியில் தபஸ் என வழங்குவர். தவம் என்றால் உருக்கு அல்லது உருகு என்று பொருள். மனிதன் குறைகள் உடையவன். அவன் புலன்கள் வழிச் செல்கின்றவன். அவன் தன் குறைகளை உணர்ந்து செம்மைப்படுத்திக் கொள்வதே உருக்குவதாகும், செம்மைப் படுத்துவதன் நோக்கம் இறைவன் திருவருளைப் பெறுவதாக அமையவேண்டும்.

மனிதன் செம்மைப்படுத்த வேண்டியவை மனம், மொழி, மெய் மூன்றும்தான். ஊன் உடம்பு இறைவனுக்கு ஆலயம். அதைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். உடம்பால் செய்யும் கருமங்களில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். செயலால் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது. கடவுள், குரு, பெரியோர், பெற்றோர் ஆகியோரை வீழ்ந்து வணங்கவேண்டும். இவ்வாறு மெய்ம்மையாக ஒழுகுதல் மெய்யினால் செய்யப்படும் தவம்.

பேசும் மொழி நேர்மையுடையதாக இருக்கவேண்டும். தீய மொழி பேசாது இனிய மொழி பேசவேண்டும். இறைவனுக்குரிய திருப்பாடல்களையும் நூல்களையும் வாயால் ஓதவேண்டும். இது வாய்மை எனும் வாய்த் தவம்.

இனி நினைக்கும் நினைப்பில் நேர்மையாகவிருத்தலே மனம் செய்யத்தக்க செயலாகும். இறைவனிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு அவனையே நினைத்துச் செயல்புரிய

வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ள வேண்டும். இவ்வாறு உண்மையொடு ஒழுகுதலே மனத் தவமாகும்.

இம்முறையில் மனமொழி மெய்களைச் செம்மை யாக்கிக் கடவுளை நினைத்து உருகுவானேயானல் அதுவே ஒப்பற்ற தவமாகின்றது. தவம் செய்து எது வேண்டு மானாலும் வேண்டிப் பெறலாம். வேண்டிப் பெறுவதற் குரியதைக் காமியத்தவம் என்பர். அசுரர் செய்த வன்மை யான தவத்தை அசுரத்தவம் என்பர். யார் எவ்வகைத் தவம் புரிந்தாலும், தவத்திலே சிறந்தோர்க்கெல்லாம் அரசனாக விளங்குபவன் அறுமுகனே.

அகத்தியமாமுனிவர், நாரதமாமுனிவர், பராசரர் புதல்வர் அறுவர், சுகமுனிவர், வாமதேவர், அருணகிரி நாதர், குமரகுருபரர், குமரகுருதாச சுவாமிகள் ஆகிய தவ முனிவர்களுக்கெல்லாம் தண்ணருள் பாலித்த அரசன் சண்முகனே.

மேற்கோள் :

''முளையிள மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி யிறைவர் தமக்குச் சாத்திர
முறையருள்முருக, தவத்தைக் காப்பவர்—தம்பிரானே''

—திருப்புகழ்.

''சிவராஜ யோகனே தவராஜ ராஜனே''

—பாம்பனடிகள்.

15. ஓம் இகபர பதயே நமோ நம :

பொருள் . இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அளிக்கும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : இகம்—இம்மண்ணுலக இன்பம்; பரம்—அவ் விண்ணுலக இன்பம்.

முருகப்பெருமான் தன்னை வணங்கும் அடியார்களுக்கு இம் மண்ணுலகத்திற் பெற வேண்டிய எல்லா இன்பங் களையும் தருவான். பின்பு விண்ணுலகத்திற் சென்று அனு பவிக்கும் முக்தி இன்பத்தையும் அளிப்பான். இதற்கொரு சான்று காண்போம். பொதியமலையின் சாரலில் பிரமன் நெடுங்காலம் முருகப்பெருமானை நோக்கித் தவம் கிடந் தான். முருகப்பெருமான் புன்முறுவல்காட்டி மறைந் தருளினார். பிரமன் மனம் வருந்திப் பின்னும் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் கிடந்தான். வேலிறைவன் வந்தாரல்லர். நாராயணமூர்த்தி தோன்றிப் பிரமனுக்கு அறிவுரை கூறினார். வேலிறைவனிடம் வரம்பெற ஆறெழுத்து மந்திரத்தை நினைத்துத் தவம் செய்யுமாறு சொன்னார். பிரமனும் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்துத் தவம் செய்தான். முருகப் பெருமானும் காட்சியளித்துத் தவம் செய்தது எதற்காக என்று வினவினார். முதற் கடவுள் பரமசிவம் என மறைகள் கூறின. தாங்களே முதற்கடவுள் என்ற இந்திரன், திருமால் முதலியோரும் கோடி சூரியப் பிரகாசத்துடன் வெளிப்பட்ட பரமசிவத்தை வணங்கினர். எனது ஆணவமல மறைப்பால் என் நெற்றி நடுவில் தோன்றிய நீயா முதற்கடவுள் என்றேன். அச் சொல் முடியுமுன்னே பைரவக் கடவுள் வந்து எனது ஐந்தாவது தலையை நகத்தாற் கிள்ளிச் சென்றார். அதன்பின் மூர்ச்சை யுற்றேன். இழந்த தலையைப் பெறுவதற்குக் கருணைக் கடலாகிய தேவரீரை அழைத்தேன். பிழையிருப்பின் பொறுத்தருள வேண்டும் என்றான். அதுகேட்ட வேலிறை

வன், ''சிவநிந்தை செய்த உனக்கு அது எளிதிற் சித்திக்காது. சிவன்வேறு, யான்வேறு அல்லேம். ஆயினும் திருச்செந்தூர் சென்று வதனாரம்ப தீர்த்தத்தில் முழுகித் தவம் செய்வாய்'' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தருளினன்.

பிரமன் அவ்வாறே சென்று நாலாயிர யுகம் பூசித்துத் தவம் செய்தான். விமானமாக இருந்தே தொழும்படி வேலிறைவன் இட்ட கட்டளைப்படித் தவம் செய்தான். இறுதியில் வேலிறைவன் காட்சியளித்து, ஐந்தலையும் படைப்புத் தொழிலும் வேண்டிய இம்மை இன்பங்களும் அளித்தருளினான். மறுமையில் தமது சாரூப்ய முக்தியையும் கொடுத்தருளினன். இதனால் சுவாமிகள் இகபரபதயே என்று துதிக்கின்றார்,

மேற்கோள் :

''இகபர சௌபாக்கியம் அருள்வாயே''

—திருப்புகழ்.

வேதனுக்கு உலகம் யாவும் விதித்திடும் செயலும்ஞான
போதனைச் செயலும் உள்ளம் பொற்புற உபதே சித்துக்
காதலிற் சிறந்த வேற்கைக் காங்கேயன் கருணை காட்டித்
தீதறு போக மோக்கத் தியாகியென்று இருந்தான் மன்னோ.

=திருச்செந்தூர்ப் புராணம்.

''இகபரம் இரண்டினும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே,''

—பாம்பனடிகள்.

16. ஓம் புகழ்முனி பதயே நமோ நம :

பொருள்: திருப்புகழ் பாடிய முனிவராகிய அருணகிரிநாதர் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : புகழ்—திருப்புகழ் எனும் பாடல்கள். முனி—முனிவர் (அருணகிரிநாதர்)

அறுமுகன் ஒருவனையே வணங்கிப் பாடும் நியமம் உடைய பிரணவ பரம்பரையில் முதன்மையானவர் அருணகிரிநாதப் பெருமான். அவனையே பரம்பொருள் எனக் கொண்டவர். ஐம்முகச் சிவனுக்குத் திருஞான சம்பந்தர் பதினாறாயிரம் பாடல்களைப் பாடிப் பரவினார். அவர் போன்றே இவரும் அறுமுகச் சிவனுக்குப் பதினாறு யிரம் சந்தப்பாமாலை சூட்டிப் போற்றினார். முற்பிறப்பிற் செய்த தவ பலத்தால் சண்முகக் கடவுள் இவரிடத்தில் தண்ணருளைச் சுரந்தார். குருவடிவாக முன் தோன்றினார். தமது திருக்கரத்தால் திருநீறிட்டார். இதுவரை வாட்டிய தொழுநோய் மறைந்தது. பொன்போல் ஒளிவீசும் திரு மேனியைப் பெற்றார். இளநகை காட்டித் தன் திருக்கண் களால் நோக்கினார். தன் தாமரைத் திருவடியை அவர் தலைமேல் சூட்டினார். ஜெபமாலை அளித்தார். பிரபஞ்சத் தால் வரும் சஞ்சலத்தை நீக்க மூவாசைகளையும் அறுத்தார். மனம், வாக்கு, இவைகளுக்கு எட்டாததாய்,மெய்ஞ்ஞானி களும் உணர்தற்கரிதான ''சும்மா இரு; சொல்லற'' என்னும் மௌன உபதேசத்தைப் போதித் தருளினார். திருப் புகழ் எனும் சந்தப் பாவகை பாடுந் திறத்தையும் தந்தருளினார். ''முத்தைத் தரு பத்தித் திருநகை அத்திக் கிறை'' என இவர்க்கு அடியெடுத்துக் கொடுத்தருளிய வரும் முருகனே.

திருவயலூர் முருகன் கனவில் தோன்றித் ''திருப்புகழ் பாட வேண்டும் எனும் உனது அவாவைப் பூர்த்தி செய்

கிறேம். நீ இனி நமது ஊர்தியாகிய மயிலையும், மாலையாகிய நீபத்தையும், படையாகிய வேலையும், கொடியாகிய கோழியையும், பேரின்ப நிலையாகிய சிற்றடியையும் பன்னிரு தோளையும், செய்ப்பதியையும் சிறப்பித்து நித்தம் திருப்புகழ் விருப்பொடு உரைத்தி'' எனக் கட்டளையிட்டு மறைந்தருளினர். திருவயலூர் முருகன் கட்டளையை நிறைவேற்ற முருகன் திருத்தலந்தொறும் சென்று பாடினர்.

இவர் பாடிய திருப்புகழ் மந்திர மறை, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இவரையே தமது ஞான குருவாகக் கொண்டார். முருகன் ஒருவனையே 6666 இனிய அரிய பாக்களால் பாடினர். முருகனே நேரில் வந்து உபதேசிக்கப் பெற்ருர். தமது பாடல்களின் முடிவில் அருணகிரிநாத முனிவரின் திருப்பெயரை வைத்துப் பாடியே முடித்தார். ஓசைமுனி, சந்தமுனி, அருணைமுனி, புகழ்முனி என அருணகிரிநாதப் பெருமானுக்குத் தம் பாடல்களில் பெயர் சூட்டி மகிழ்கின்ருர்.

ஓதுவோரை உய்விக்கும் திருப்புகழ் பாடிய அருணை முனிவனுகிய தலைவனுக்கு அடிகள் வணக்கம் செலுத்த மறப்பரோ ?

''சேயோன் ஒருவனையே புகழ்ந்தவருள் அருணகிரி
சேவடிப்போது உளந்தில் வைப்பாம்''

என்பதும் சுவாமிகளின் திருவாக்கன்றே?

மேற்கோள் :

''அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமும் இருபெரு சரணமும் மறவேனே,''
''ஜெபமாலை தந்தசற் குருநாதா.''

—திருப்புகழ்.

''சும்மா இரு; சொல்லற என்றலுமே.''

—கந்தரநுபூதி.

''ஆவியர் சுவாமியே அருணகிரி நாதனுக்
கருடந்த குருநாதனே.''

''சந்தமுனி எந்தையும் சால வந்தித்த தேவே.''

''நிஜ அருணைமுனிவரும் நிரம்ப வந்தித்த பெரிய''

''புகழ்படித்த கோன்''

''தண்டமிழ் மாமுனி''

''ஓசைமுனி ஆட''

''மட்டில் புகழ்முனி''

—பாம்பனடிகள்.

17. ஓம் ஜயஜய பதயே நமோ நம :

பொருள் : மிகுந்த வெற்றியை உடைய தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஜயஜய—வெற்றி வெற்றி (மிகுந்த வெற்றி)

ஜய எனும் சொல்லை இருமுறை அடுக்கிக் கூறுவது மிகுதியைக் குறிப்பதற்காக. முருகப்பெருமானது மிகுந்த வெற்றியை இவ்வாறு கூறினர். அவன் குழந்தை முருகனாக இருந்துகொண்டே திருக்கயிலாயத்திலும், மேரு மலையிலும் வாகை பல சூடி ஓகை அளித்தவன்.

திருக்கயிலாயத்தில் சிவனைக் குறித்து நாரதர் வேள்விசெய்தார். செய்ம்முறையில் தவறியதால் அதி னின்றும் ஆட்டுக்கடா ஒன்று தோன்றியது. அது எல்லாப் புவனங்களும் நடுங்க உடம்பைக் குலுக்கிக்

கொண்டு விரைந்து ஆர்ப்பரித்து வந்தது. அதனைக் கண்ட நாரதர் முருகனை வேண்டினர். முருகன் அக் கடாவை அடக்கி அதன் முதுகின்மேல் ஏறி எல்லாப் புவனங்களையும் சுற்றி வந்தான். அந்த ஆட்டுக்கடாவையே தனக்கு வாகனமாக ஆக்கிக் கொண்டான்.. இஃதொரு விளையாட்டான வெற்றி.

மேருமலையில் அதன் சிகரங்களைப் பெயர்த்தெடுத்து வீசினன். இதனை அறிந்த இந்திரன் வெகுண்டான். தனது வச்கிராயுதத்தால் முருகனைத் தாக்கினன். வச்சிராயுதம் சாம்பராயிற்று. மேருமலையை நடுங்கும்படி அசைத்தான். உடனே ஐராவதத்தை ஏவினன். அதன்மீது ஓரம்பை ஏவினன். அது மடிந்து வீழ்ந்தது. பின்பு இந்திரன் மீது நான்கு அம்புகளைச் செலுத்தினன். அவை அவன் முடி, கவசம், கொடி ஆகியவற்ரேடு அவனையும் வீழ்த்தின. இதனைக்கண்ட இயமன் அம்புகள் வீசி எதிர்த்தான். அவனை ஐந்து அம்புகளால் வீழ்த்தினன். அக்னி சீறிக்கொண்டு போருக்கு வந்தான். அவனை மூன்றே அம்புகளால் நிலத்தில் வீழ்த்தினன். உடனே வருணன் ஓடிவந்து எதிர்த்தான். அவனை நான்கு அம்புகளால் தரையில் தள்ளினன். வாயுதேவன் விரைந்து வந்து அம்பு வீசினன். அவனை இரண்டு அம்புகளால் கீழே உருட்டினன். சூரியன் மிகுந்த கோபத்தோடு போர் செய்தான். அவனையும் இரண்டு அம்புகளால் பூமியில் வீழ்த்தினன். கடைசியாகச் சந்திரன் வந்து எதிர்த்தான். அவனையும் ஓரம்பினல் வீழ்த்தினன் ஆற்றல் மிக்க இத்தனை தேவர்களையும் தேவர் தலைவனை இந்திரனையும் எளிதில் வென்று வாகைசூடினன்.

கிரௌஞ்சகிரியைப் பிளந்தான். தாரகாசுரனைக் கொன்ருன். இறுதியாகச் சூரனையும் வேரொடு தொலைத்து வாகைசூடினன். சண்முகனை எதிர்த்தார்க்குத் தோல்வியும் அவனுக்கு வெற்றியும் கிட்டும் என்பதன்ருே உண்மை.

எவரும் பெறமுடியாத வெற்றியைப் பெற்ற சண்முக னைச் சுவாமிகள் 'ஜயஜய பதயே' எனத் துதிக்கின்ருர்.

மேற்கோள் :

''தார மேனிய னதன்மிசை யிவர்ந்து ப∴றலமும்
ஏர ருமலு லாவியென் ஹூர்தியி∴ தென்ருன்''
உறுசரம் இரண்டான் முடிபாடார்
துகில்பரமி ழந்தாரு ணர்வையும கன்றேர்
சுடர்நிலம்வி ழந்தா னுலகீரே.

—ஸ்ரீமத் குமாரசுவாமியம் 1-10.

''ஜெயஜெய ஸரஸர செந்நிற் கந்தப் பெருமாளே''

—திருப்புகழ்.

18. ஓம் நயநய பதயே நமோ நம:

பொருள் : மிக்க நன்மையும் இன்பமும் தரும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : நயம்—நன்மை, இன்பம், விருப்பம், மேன்மை, அறம். நீதி எனப் பல பொருளைத் தரும் சொல்லாகும். செவ்வேட்பரமன் குணங்களில் இவை அனைத்தும் அடங்கும். இங்குக் குறிப் பாக நயம் எனுஞ் சொல் நன்மையையும் இன்பத்தையும் குறிக்கும்.

முருகப்பெருமான் திருமுகங்கள், திருக்கைகள், திரு வடிகள், திருமேனி அனைத்தும் கண்டு தரிசிப்போர்க்கு இன்பம் அளிக்கின்றன. மனத்தால் நினைப்பவர்க்கும் இன்பமளிக்கின்றன. காட்சி இன்பத்தையும் கருத்து இன்பத்தையும் அடியார்கள் பெறுகின்றனர்.

அவனது ஆறுமுகங்கள் நன்மைகளைச் செய்கின்றன. ஒரு முகம் சூரன் முதலிய பகைவரை அழிக்கும். ஒருமுகம் ஊழ்வினையை மாற்றிப் பேரின்ப வாழ்வுதரும். ஒருமுகம் மறைகளையும் ஆகமங்களையும் வழங்கும். ஒருமுகம் உயிர்களின் பாச இருளைப் போக்கும். ஒருமுகம் போகம் விரும்பும் வள்ளி தெய்வயானையர்க்கு மோகம் அளிக்கும். ஒரு முகம் அன்பர்களுக்குப் பல வரங்களை அருளும். இவ்வாறு குமரகுருபரர் போற்றுவதன் மூலம் முருகன் அளிக்கும் நன்மைகளை அறியலாம்.

மேலும் அவன் திருவடிகள் விழிக்குத் துணை. 'முருகா' என்னும் நாமம் மொழிக்குத் துணை. முற்பிறப்பில் செய்த பாவங்களைப்போக்கப் பன்னிரு தோள்கள் துணை. வேலும் மயிலும் அச்சம் நிறைந்த வழிக்குத் துணை. இவ்வாறு என்றும் எங்கும் துணையாக இருந்து நன்மையும் இன்பமும் அளிக்கின்றான் எனக் கந்தரலங்காரம் இசைக்கின்றது.

உயிர்கள் ஆணவமல இருளில் கட்டுண்டு கிடக்கின்றன. அவற்றை உய்விக்க இறைவன் தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை அளிககின்றான். உயிர்கள் போகங்களை நுகர்கின்றன. அவற்றில் சலிப்படைந்து இறை இன்பத்தை நாடுகின்றன. இறைவன் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானம் வழங்குகிறான். அதன்மூலம் அழியாத இன்பத்தைப் பெறவும் செய்கிறான். இவ்வாறு சிவஞானதீபம் செப்புகிறது.

முருகன் ஆன்மாக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் இன்பங்களையும் அளித்து உய்விக்கும் தலைவன் என்க.

மேற்கோள் :

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

—கந்தரலங்காரம்.

''கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்து உழலத்திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்து
....
உலவா இன்பம்—மருவித்து''

—கந்தர் கலிவெண்பா.

19. ஓம் மஞ்சுள பதயே நமோ நம:

பொருள் : அழகுருவான தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : மஞ்சுளம்—அழகு.

அறுமுகன் அழகே உருவானவன். அதனால்தான் அழகு என்ற பொருளுடைய முருகு என்ற சொல்லடியாக முருகன் எனும் பெயர் வந்தது. இளமை, அழகு, மணம், தேன், விழா எனும் பண்பு அழகுகள் எல்லாவற்றையும் உடையவன் முருகன். அவன் என்றும் இளமைக்காரன். இளைய நாயகன். வடிவும், இளமையும், வலிமையும், அழகும் மிக்கவன். வடிவில் நாயகன். அந்தம் வெகு வான ரூபக்காரன். மற்றவர் ஒப்பிலா ரூபன். அவன் அழகு எழுதரிய ஒன்று.

அவனது திருமேனி செக்கர் நிறமாயிருக்கும். நீறு பூத்த செம்பொன்போல் ஒளி வீசும். நூறுயிரங்கோடி உதயசூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவதை ஒத்த தெய்வீக வடிவுடையவன்,

பசும்பொன்னாலும் நவரத்தினங்களாலும் செய்யப் பெற்ற ஒளிவீசும் கிரீடங்களும், ஆறு பிறைகளை வரிசை யாக வைத்தாற்போன்ற நெற்றிப் பொட்டழகும், விரிந்த தாமரை மலர்கள் போன்ற பன்னிரு அருள்விழிகளும், பல

சூரியர்கள் ஒருங்கே கூடி ஒளி வீசினாற்போன்ற மகரக் குழைகளும், புன்முறுவல் தவழும் உதடுகளும், பிறப்பைத் தீர்க்கும் இன்சொலும் ஆகிய எல்லா அழகுகளும் உடையவன் முருகன்.

அவன் முகங்கள் ஆறும் வாசமிக்க தெய்வத்தாமரையும் முழுநிலவும் போன்று அழகொளி வீசுகின்றன. மலை போன்ற பன்னிரு தோள்களிலும் கடப்பமலர், குரவமலர் மாலைகள் புரளுகின்றன. அழகிய பன்னிரு திருக்கரங்களும், கொடையும், காதலும், மணமும், அபயமும், போரும், வீரமும் காட்டும் இயல்பின. மார்பிலும், இடையிலும், தொடையிலும் பொருந்தி அழகு செய்கின்றன.

அழகிய பொன்மணி பூண்ட அகன்ற மார்பும், பொன் பூணூலும், உருத்திராக்கமாலையும், பூம்பட்டாடையும், பொன் அரைஞாணும், கச்சையழகும், திருஅரையும், வீரக்கழலும், பொற் கிண்கிணியும், பாதச்சிலம்பும் காண்பார் கண்களையும் மனங்களையும் கவர்வன.

முருகன் திருவடிகள் அழகும் வாசனையும் மிக்க செந்தாமரை போன்று விளங்குகின்றன. 'தாமரை புரையும் காமர் சேவடி! எனப் பெருந்தேவனாரும், 'சீதள வாரிஜ பாதா நமோ நமோ' எனப் புகழ்முனியும் புகழ்கின்றனர்.

அழகே முருகன். அவனைக்கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகன் என்பர்.

மேற்கோள் :

"அந்தம் வெகுவான ரூபக்கார"
"மற்றவர் ஒப்பிலா ரூபாதிபா"
"மிக்க லக்ஷணகு மார சுப்பிரமணியோனே"
"அழகான மேனி தாங்கிய வேளே"
"வடிவும் இளமையும் வளமையும் அழகிய—பெருமாளே"

"செக்கர் நிறமாயிருக்கும்—பெருமாளே"
"நீறுபடு மாழைபொரு மேனி"
"நிறத்திற் கந்தன்"
"இலகு கமலமுகமும் அழகும் எழுதரிய—பெருமாளே"
"சீதள வாரிஜ பாதா நமோ நமோ"

—திருப்புகழ்.

"முழுமதி யன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும், வேறுள படையின் சீரும்
அழகிய கரம்ஈராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியும் கண்டான்; அவன்தவம் செப்பற் பாற்றோ"

—கந்தபுராணம்.

20. ஓம் குஞ்சரி பதயே நமோ நம :

பொருள் . தேவகுஞ்சரி எனும் தெய்வயானை அம்மையின் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : குஞ்சரி—குஞ்சரம்—யானை ; குஞ்சரி—தெய்வயானை.

தேவகுஞ்சரி, தேவசேனை, தெய்வயானை எனப் பல பெயர்களால் அழைக்கப் பெறுவாள்.

திருமாலின் கண்ணிலிருந்து தோன்றியவள் அமுத வல்லி. ஆறுமுகனை மணவாளனாக அடைய ஆர்வம் கொண்டாள். இமயமலைச் சாரலில் ஓரிடம் தேர்ந்தாள். அங்குக் கடுந்தவம் புரிந்தாள். முருகன் காட்சியளித்தான். "தேவேந்திரனுக்கு மகளாய்த் தோன்றி வளர்க. நாம் மணம் புரிவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

அமுதவல்லி குழந்தையானுள். தேவேந்திரன் திருமுன் தவழ்ந்தாள், அழகிய இக்குழந்தையை எடுத்தான். நான்கு தந்தங்களுடைய தனது ஐராவதம் என்ற யானை யிடம் ஒப்படைத்து வளர்த்துவரச் சொன்னுன். இந்தத் தெய்வயானை அன்புடன் வளர்த்தது. இந்த யானை வளர்த்ததால் அமுதவல்லி தெய்வயானை என்ற பெயர் பெற்ருள். தேவகுஞ்சரி எனவும் அழைத்தனர்.

அறுமுகன் சூரனைப் போரில் மடித்து இந்திரனுக்கு இந்திரலோகத்தை மீட்டுத் தந்தார். போர் முடிந்தபின் திருப்பரங்கிரியில் தன் படைகளுடன் தங்கியிருந்தார். இந்திரன் அங்குச் சென்று முருகப் பெருமான் திருவடி களைத் தொழுதான். தெய்வயானையைய மணமுடிக்குமாறு விண்ணப்பித்தான். அவனும் இணங்கினுன்.

திருப்பரங்கிரியில் விசுவகருமனுல் திருமணச்சாலை காண்போர் வியக்க அமைக்கப் பெற்றது· சங்கரனும், மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும், மண்ணுலக மன்னர்களும் வந்து குழுமினர். மாணிக்கப் பீடிகையில் மணமக்களை அமரச் செய்தான். இந்திராணி நீர்வாக்க இந்திரன் முருகன் திருவடிகளைப் பூசித்தான். பின்பு தாரைநீர் வார்த்துத் தெய்வயானையைக் கொடுத்தான். முருகவேளும் மணமாலையைக் கையிலேந்தி, ''நினக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றினேம்'', எனத் தெய்வ யானையிடம் கூறி மாலை சூட்டியருளினன். பிரம்மதேவன் வைதிகச் சடங்குகளை நிறைவேற்றினுன். ஆறுமுகனுக்கும் தெய்வயானைக்கும் நடந்த தெய்வத் திருமணத்தைக் காணும் பேறு பெற்றவர்கள் யாவரும் எல்லா நன்மையும் எய்தினுர்கள். இவ்வாறு தெய்வயானை என்னும் ஞான சத்தியால் சரவணபவன் அலங்கரிக்கப்பட்டான்.

மேற்தோள் :

''தெய்வயானைக்கு இனிய பெருமாளே''
''தேவகுஞ்சரி பாகா நமோ நமோ''
''குஞ்சரி குயம் புயம் பெற''

—திருப்புகழ்.

21. ஓம் வல்லி பதயே நமோ நம :

பொருள் ; வள்ளியம்மை தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : வல்லி—வள்ளியம்மை.

திருமால் வாமன அவதாரம் எடுத்தார். அப்போது அவர் திருக்கண்களிலிருந்து சுந்தரவல்லி தோன்றினாள். இவள் கந்தவேளை மணம்புரிய ஆவல் கொண்டாள். ஆவலை நிறைவேற்ற இமயமலைச் சாரலில் தவம் புரிந்தாள். ஒருநாள் கந்தவேள் காட்சி அளித்தார். சுந்தரவல்லி பூலோகத்தில் சிவமுனிவர்க்கு மகளாக அவதரித்த பின் தான் வந்து திருமணம் செய்வதாகத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

விரைவில் முருகவேளை அடைய ஆசைமிக்க சுந்தரவல்லி அடுத்த பிறப்பெடுக்கக் காலந் தாழ்த்தவில்லை. எரியை வளர்த்து அதில் மூழ்கினாள். சூக்கும தேகம் பெற்றாள். வள்ளிமலைக்குச் சென்று முருகவேளை நினைந்து தவம் செய்தாள். அங்குத் திருமாலே சிவமுனிவராக வந்தார். ஒரு பக்கம் இருந்து தவம் செய்தார். திருமகள் அழகிய பெண்மானாக அவர் முன்வந்தாள். அந்த மானின் அழகில் ஈடுபட்டு முனிவர் மோகத்தோடு பார்த்தார். அவர் பார்வையினால் மான் கருவுற்றது, அக்கருவில் சூக்கும உடம்போடு சுந்தரவல்லி புகுந்தாள். வள்ளிக்

கிழங்குகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட குழியில் அம்மான் மனித உருவில் ஒரு பெண் மகவை ஈன்றது. உரிய நேரத்தில் நம்பிராசஞன வேடர் தலைவன் அக் குழந்தையைக் கண்டு எடுத்தான். தன் துணைவியிடம் கொடுத்தான். யாவரும் மகிழ்ந்தனர். வேடர்குல முதியோர்கள் கூடினர். வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் பிறந்தமையால் இம்மகவிற்கு 'வள்ளி' எனப் பெயர் சூட்டினர்.

வள்ளி பன்னிரண்டு ஆண்டுப் பருவம் அடைந்தாள். வேடர்குல முறைப்படித் தினைப்புனங் காக்க அனுப்பி வைத்தனர். நாரதர் வள்ளியைக் கண்டார். முருகப் பெருமானிடம் அவள் அழகை வருணித்து இருப் பிடத்தையும் கூறிச் சென்ருர். வள்ளிமீது காதல் கொண்ட பெருமான் வேடஞகவும், வேங்கை மரமாகவும், விருத்தஞகவும் வந்து வள்ளிமுன் திருவிளையாடல்கள் புரிந்தார். கந்தவேள்மீது காதல் கொண்ட வள்ளி இந்த வேடன் சொற்களுக்குச் சிறிதும் செவி சாய்க்கவில்லை. இறுதியில் பிரணவ சொருபஞன விநாயகரை அழைத் தார். யானையாக வந்து பயங்காட்டச் சொன்ஞர். அவரும் அவ்வாறே செய்தார். யானையைக் கண்டு வள்ளி நடுங்கிஞள். தன்னைக் காப்பாற்றும்படி விருத்தனாக வந்தவரை வேண்டினாள், அவரும் யானையைப் போகும் படி கட்டளையிட்டார். அவர் சொல்லுக்குப் பணிந்து யானையும் மறைந்தது.

சங்கிலித் தொடர்போல நடந்த நிகழ்ச்சிகளை வள்ளி நினைத்தாள். தான் நினைத்து உருகும் சண்முகனைத் தன்னை வந்து காப்பாற்றும்படி அழுது கண்ணீர்சிந்திஞள். தினைப் புனத்திலும் சுனையிலும் திருவிளையாடல் புரிந்த சண்முக நாதன் தனது மெய்க்கோலம் காட்டி வள்ளியை அணைத் தார். பின்பு சுபவேளையில் நம்பிராசன் சீறூரில் புலித்

தோல் விரித்த பீடிகையில் அமர்ந்து மணமகனாக இருந்து வள்ளிக்கு மாலை சூட்டி ஏற்றார்.

முருகப் பெருமான்மீது அளவிலாத காதல் கொண்டவள் வள்ளி. அதனால்தான் எரியில் மூழ்கினாள். இரண்டு முறை தவம் செய்தாள். காதல்மிக்க அவ்வேடர் குலக் கன்னியின் கற்பை உலகிற்குக் காட்டவே பெருமான் பல கோலங்கள் காட்டித் திருவிளையாடல் புரிந்தார். அடியார்கள் தன்னை வணங்குவதால் அடைகின்ற நன்மைகளை வள்ளியை வணங்கி அடையலாம் என அருள் பாவித்தார். இதனால் தெய்வயானையைக் காட்டிலும் உயர்ந்தவளாகினாள். முருகப்பெருமானுடைய கிரியாசத்தியே வள்ளியம்மை. ஆதலால் வள்ளியம்மையாக வந்து பெருமானைக் கிரியாசத்தி அலங்கரிக்கின்றது என உணர வேண்டும்.

மேற்கோள் :

**''பணியாயென வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே''.
''சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதனோடு திரிந்தவனே''.
''செம்மான் மகளைத் திருடும் திருடன்'',**

—கந்தரனுபூதி.

**''நாத்தளர்ந்து சோர்ந்து நடுக்கமுற்றுப் பற்கழன்று
மூத்துநரை முதிர்ந்த மூதாளர் வந்து ஈண்டிப்
பாத்திபடு வள்ளிப் படுகுழியில் வந்திடலால்
வசய்த்த இவள்நாமம் வள்ளியெனக் கூறினரே''.**

—கந்தபுராணம்.

''காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
கானக் குறவர் களிகூரப் பூங்குயில் போல்
ஏனற் புனங் காத்து இனிதிருந்து—மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே''.

—கந்தர் கலிவெண்பா.

''வள்ளி படர்கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த—பெருமாளே''

—திருப்புகழ்.

22. ஓம் மல்ல பதயே நமோ நம:

பொருள் : மற்போரில் வல்ல தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : மல்ல—மற்போரில் வல்லமையுடைய; மல்—வலிமை ; போர்—ஆயுதங்களில்லாமல் உடல் வலிமையால் செய்யப்படும் போர் மற்போர் ஆகும்.

பழங்காலத்தில் வீரர்களின் போர் வகைகளில் ஒன்று மற்போர். பிற்காலத்தில் மற்போர் என்பது விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றாகிவிட்டது.

தொல்காப்பிய இலக்கணத்தில் மற்போரைப்பற்றிப் புறத்திணையியலில் வாகைத்திணையில் மல்வென்றி எனும் ஒரு துறையே இருக்கிறது, போர்வைக்கோப் பெருநற்கிள்ளிக்கும் ஆமூர் மல்லனுக்கும் மற்போர் நடந்தது. அதில் ஆமூர்மல்லன் கொல்லப்பட்டான் என்று புறநானூறு கூறுகிறது. கண்ணன் ஒரு மல்லனாகச் சென்று வாணன் எனும் அவுணனைக் கொன்றான். அதனை

விளக்கும் கூத்து மல்லாடல் எனப் பெயர் பெறும். கம்சன் அனுப்பிய இரு மல்லர்களைக் கண்ணன் கொன்ருன். பாரத வீரர்களான வீமனுக்கும் சராசந்தனுக்கும் மற்போர் நடந்தது. சராசந்தன் உடலை இரண்டாகக் கிழித்து வீமன் தலைகீழாக மாற்றிப் போட்டான். அதனால் அவன் இறந்தான் எனப் பாரதம் கூறுகின்றது. இவ்வாறு மற்போர்ச் செய்திகள் பல உள்ளன.

இத்தகைய மற்போரில் வல்லமை மிக்க தலைவன் முருகன் ஆவன். இப்போருக்கு ஏற்ற உடல் வலிமை மிக்கவன். அவன் மார்பு அழகும் பெருமையும் பொருந்தியது. உத்தம இலக்கண இரேகைகள் தோள்கள்வரை நீண்டிருக்கும், அந்தத் தோள்கள் மிக்க வலிமை உடையன. ஒளி பொருந்தியன. புகழ் நிறைந்தன. வளைந்தும் நிமிர்ந்தும் இருந்தன. அவன் பன்னிரு தோள்களும் மல்லே புரிவன. மற்பொரு திரள் புயங்களைக் கொண்ட மதயானை முருகன். அவனை மற்போரில் வென்று அடக்கு வார் ஒருவரும் இல்லை. முருகன் தானே மற்போர் செய்து கொண்டான். அதாவது சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளும் தமக்குள் போரிட்டுப் பலவாறு விளை யாடின. பாசுபத அஸ்திரம் பெற அர்ச்சுனன் தவம் புரிந்தான். அப்போது வேடனாக வந்த சிவபெருமான் அலனுடன் மற்போர் புரிந்தான். முருகன் இத்தகைய மற்போரில் வல்ல தலைவனாக இருப்பதால், சுவாமிகள் 'மல்ல பதயே' என வணங்குன்ருர்.

மேற்கோள் :.

''மல்லே புரிபன் னிருவாகு''

—கந்தரநுபூதி.

''மற்பொரு திரள்புய மதயானை''

—திருப்புகழ்.

''வேல்திறல் மைந்தரோடு மல்லமர் விளைத்து வென்றும்''

—திருவிளையாடற் புராணம்.

23. ஓம் அஸ்த்ர பதயே நமோ நம:

பொருள் : கைவிடு படைகளின் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : கையை விட்டு நீங்கிச் சென்று பகைவர்களைத் தாக்குவதற்குப் பயன்படும் படைக் கலங்களைக் கைவிடுபடை என்பர், இவற்றை அஸ்திரம் என்று வடமொழியிற் கூறுவர். ஆங்கில மொழியில் Missile என்பர். கையிலிருந்து எறியப்படுவன இப்படைகள். இவைகள் தெய்வத்தன்மை பொருந்திய படைகள். தேவர்களும் அசுரர்களும் தவ முயற்சியால் இவற்றைப் பெற்றார்கள். இந்த அஸ்திரம் ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய மந்திரம் உண்டு. அம்மந்திரத்தைச் செபித்து அஸ்திரத்தைச் செலுத்தவேண்டும்.

இதிகாச புராணங்களின் கூற்றுப்படி அஸ்திரங்கள் பலவாகும். பாசுபதாஸ்திரம், பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம், நாகாஸ்திரம், வாயுவாஸ்திரம், அக்கினியாஸ்திரம், மோகாஸ்திரம், அமோகாஸ்திரம், மாயா பாசாஸ்திரம், பைரவாஸ்திரம், முதலியன குறிப்பிடத் தக்கன.

முருகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கும் போர் நடந்தது. அப்போரில் பானுகோபன் மோகாஸ்திரம், மாயாபாசாஸ்திரம் ஆகியவற்றை விடுத்தான். அதிசூரன் அக்கினியாஸ்திரத்தை ஏவினான். நாராயணாஸ்திரத்தைச் செலுத்தினான், விசயன். சூரபன்மன் மைந்தர்கள் மூவாயிரவர் மீது பைரவாஸ்திரத்தை விடுத்தான். அனைவரும் மடிந்தனர். முருகப் பெருமானின் மீது சூரன் பாசுபதாஸ்திரத்தை ஏவினான். இவ்வாறு தேவர்

களாலும் அசுரர்களாலும் அஸ்திரங்கள் பல ஏவப்பட்டன,

முருகப் பெருமான் திருக்கைவேல் அஸ்திரம் எனவே கூறப்படுகிறது. ஆனால் வேற்படை, வேலாயுதம் என்று தான் அழைக்கப்படுகின்றது. வேலரஸ்திரம் என்று கூறப்படுவதில்லை. இருப்பினும் வேற்படை எல்லாப் படைகளுக்கும் தலைவனாக இருப்பதால் அது அஸ்திரமும் சஸ்திரமும் ஆகும். இதனைப் படைக்கல நாயகம், படைக்கல அரசு எனத் தலைமையின் காரணமாக அழைப்பர். பகைவர் உடம்பை இடித்து அழிப்பதால் உடம்பிடி என்பர். எப்போதும் வெல்லும் தொழிலையே செய்வதால் வேல் என்பர். சிவபெருமானிடம் உள்ள மூவிலைச் சூலம் இச்சை, ஞானம், கிரியை என்னும் முக்குணங்களைக் காட்டும். அம்மூன்றும் திரண்ட ஒரு வடிவே வேற்படை என்பர். சடத்துவம் இன்றிச் சிதத்துவமாக உள்ளதே வேல். சிவசத்தியே அஸ்திர ரூபமாக வந்தமையால் வேற்படை ஞானசத்தியாகும். சிவத்தையும் சத்தியையும் பிரிக்கமுடியாது. ஆதலால் வேல் அஸ்திரத்தையும் கந்தனையும் பிரிக்க முடியாது; இக்காரணத்தால் வேற்படையே கந்தசாமி ஆவர். இந்த ஒரு படையே பல உருவம் காட்டும்; மற்ற படைகளை அழிக்கும். தான் அழியாது. பிற அஸ்திரங்களைப்போல் இதற்கு மந்திரச் செபம் தேவையில்லை, ஏனெனில் மந்திர ரூபமாக இருப்பவன் முருகனே, பாசங்களை நீக்கவல்ல வேலாகிய ஞானசத்தியைத் தரித்தவனே அஸ்திரங்களுக்குத் தலைவன் ஆவன்.

மேற்கோள் :

அந்தமில் ஒளியின் நேரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகணின்றும் வந்த இயற்கையால் சத்தியாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்,

—கந்தபுராணம்

ஞான பூரண சத்தி தரித்தருள்—பெருமாளே.

—திருப்புகழ்.

24. ஓம் சஸ்திர பதயே நமோ நம:

பொருள் : கைவிடாப் படைகளுக்குத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : சஸ்திரம்—கைவிடாப் படை.

பகைவரைத் தாக்கும்போது கையைவிட்டுப் படை நீங்காமல் பிடித்தவண்ணம் செயல்படுத்தப் பயன்படும் படைகளே கைவிடாப் படைகள். இவற்றை வடமொழியில் சஸ்திரங்கள் என்று கூறுவர். இவை ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் நின்று தாக்கப் பயன்படும். இப்படைகளைச் செலுத்த மந்திர செபம் வேண்டுவதில்லை. இப்படைகளின் திறமை எல்லாம் இவற்றை ஆளுவோர் திறத்தைச் சார்ந்துள்ளது.

வாள், வில், கதை போன்றவற்றைக் கைவிடாப் படைகளுக்குச் சான்றாகக் கூறலாம். முருகப் பெருமான் அஸதிரங்களும் சஸதிரங்களும் உடையவர். அவை எல்லா.வற்றுக்கும் தலைவர்.

சூரபன்மனைப் பொருதழிக்க முதற்கண் சிவ சத்தியையே வேற்படையாகப் பெற்றார். அது அழகாக அவருடைய வலக்கரத்தில் அமர்ந்தது. எஞ்சியுள்ள பதினொரு திருக்கரங்களிலும் ஏகாதச ருத்திரர்கள் படைகளாய் அமர்ந்தனர். இப்படைகளில் எல்லாம சஸ்திரமும் அஸ்திரமும் கலந்திருந்தன.

ஏகாதச ருத்திரர்களில், மகாதேவன் தோமரம், (எறி ஈட்டி), அரன் துவசம் (விருதுக்கொடி), உருத்திரன்

வாள் (பெரிய கத்தி), சங்கரன் வச்சிரம் (வலிமையான வச்சிராயுதம்), நீல லோகிதன் அம்பு, ஈசானன் அங்குசம், விசயன் கண்டை (பெருமணி),வீமதேவன் கமலம் (தாமரை வடிவில் அமைந்த ஆயுதம்), பவோற்பவன் தண்டம் (கதை), காபாலி வில், சௌமியன் மழு (கோடரி) என உருவுபெற்று அமர்ந்தனர்.

முருகப் பெருமான் எல்லாப் படைகளையும் தான் விரும்பிய வண்ணம் ஏவல் கொள்வான். அவை அஸ்திர மாயினும் சஸ்திரமாயினும் அவன் ஆற்றலால் செயல் புரிந்தன. சான்ருகச் சூரபன்மனேடு கடும்போர் செய்யும் போது அவனுடைய அசுரப் படைகள் எந்த இடத்தில் இருந்தாலும் அவற்றை அழிக்கும்படி வாள், கதை, உலக்கை. சக்கரம், மழு ஆகிய ஐந்து படைகளுக்கும் கட்டளையிட்டான். அவன் கட்டளையை நிறைவேற்றி அப்படைகள் திரும்பின. சருவ வல்லமை படைத்த சண்முகநாதனே சஸ்திரங்கள் அனைத்திற்கும் தலைவனக விளங்குகிருன்.

மேற்கோள் :

''சூலம் வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமும்
சூடுதோ ளுந்தடந்—திருமார்பும் !''
''பத்தொடு ஒன்றெனப் பன்னிரும் படை
எத்தி றத்தன என்னிற் றேமரம்
குத்தும் ஈட்டிவில் கோல்வல் வச்சிரம்
சுத்த தாமரை தோகை கண்டை வாள்!''
''அங்குசம் பரசாகும்!''

—ஸ்ரீமத் குமார சுவாமியம்

25. ஓம் சஷ்டி பருயே நமோ நம :

பொருள் : சஷ்டி திதியில் அமைந்த கந்த விரதத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் ; சஷ்டி—ஆறு.

சூரபன்மனைக் கந்தவேள் ஆறு நாட்கள் மட்டுமே போர் செய்து அழித்தார். சுவாமிகள் ஸ்ரீமத் குமார சுவாமியத்தில் ஆறு நாட் போராகவே பாடியுள்ளார். ஸ்காந்த மகாபுராணத்தில் ஆறு நாட் போர் கூறப் பட்டுள்ளதென்று சுவாமிகள் சான்றும் காட்டியுள்ளார். கந்தசஷ்டி என்பதே சூரசங்கார சஷ்டி விரதமே. கந்த புராணத்தில் கந்தவிரதப் படலத்தில் சஷ்டி விரதம் விளக்கப்பட்டுள்ளது.

சூரனைச் சங்காரம் செய்த ஐப்பசி மாத வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி இறுதியாகவுள்ள ஆறு நாட்களில் நோற்கும் கந்த விரதமே இச் சஷ்டி விரதமாகும். விரதம் மேற்கொள்வோர் ஆறு தினங்களிலும் நித்திய கருமம் முடித்து, புனிதநீர் நிரப்பிய கலசத்தில் மணமுள்ள அட்சதைகளை இடவேண்டும். மாவிலை கட்டவேண்டும். தருப்பையை வரன்முறைப்படி அந்தக் கலசத்தில் சாத்த வேண்டும். தருப்பை ஆசனத்தில் ஏற்றவேண்டும். மந்திர விதிப்படி குமாரப் பெருமானை அதன்கண் எழுந்தருளச் செய்து பூசை முறைப்படி பூசிக்க வேண்டும். அதன்பின் உள்ளம் ஒன்றி அவன் சரிதம் கேட்கவேண்டும். வேறு ஏதும் உண்ணாது மகிழ்வோடு தீர்த்தம் மட்டும் பருகலாம். ஆறு நாட்களிலும் நித்திரை நீத்தல் அவசிய மாகும். ஏழாம் நாள் சிவனடியாரோடு பாரணை செய்து அன்றிரவில் கண் துயிலலாம். விரத நாட்களில் துயிலா மலிருக்கச் சூது விளையாட்டு முதலியவற்றில் ஈடுபடுதல் விரத பங்கமாகவும் முடியும். இச் சஷ்டி விரதத்தை

முறைப்படி அநுட்டித்தவர்களான தேவரும் முனிவரும் தாங்கள் விரும்பியவை எல்லாம் பெற்றுச் சிறப்படைந்தார்கள். தனக்கென எதனையும் வேண்டாமல் குகப் பெருமானிடம் பக்திபூண்டு விரதம் இருப்பவரே அளவிலாத நன்மை அடைவர்.

''சிறு செம்புக் காசுக்குக் கருப்பூரம் வாங்கி ஏற்றி விட்டு உலகமெல்லாம் ஆள வரம்பெற முயலும் உலோபி போன்ற அறிவில்லாதார் அறிவை அவன் மதியான். அடியார் அன்பின் அளவே பயனும்'' கிடைக்கும்.

(பாம்பன் சுவாமிகள்)

மன்னுலக அரசன் முசுகுந்தச் சக்கரவர்த்தி குரங்கு முகமும் மனித உடம்பும் உடையவன். கந்தவேள் தெய்வயானையை மணந்த திருக்கோலத்தைக் கண்டு களிக்கும் பேறு பெற்றவன். அவன் வசிட்ட முனிவரின் அறிவுரைப்படிக் கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி நோற்ருன். அதன் பயனுக வீரவாகுதேவர் உள்ளிட்ட இலக்ஷத்தொன்பது வீரர்களையும் சகோதரர்களாகப் பெற்ருன். அவர்கள் துணையுடன் கருவூரில் செங்கோலோச்சினுன். மூவுலகிலும் புகழடைந்தான். மறுமையில் கயிலை சென்று கணநாதர் கதி அடைந்திருந்தான்.

மகிமை பொருந்திய சஷ்டிக்குத் தலைவனைச் சுவாமிகள் சஷ்டி பதயே எனப் பரவுகின்ருர். சஷ்டிநாதன் பெருமை சஷ்டிவிரதம். பூசைமுறை, பயன் ஆகிய எல்லாவற்றையும் சுவாமிகள் சஷ்டிவகுப்பு எனும் பாடலில் பாடியுள்ளார்கள். அடியார்கள் அவசியம் பாராயணம் செய்தற்குரியது.

மேற்கோள் :

வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேல் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துணையின் திங்கள் சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதியாக மூவிரு வைகல் நோற்ருர்.

—கந்தபுரா்ணம்.
கந்தவிரதப் படலம் பா, 20

26. ஓம் இஷ்டிபதயே நமோ நம :

பொருள் : வேள்வித் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : இஷ்டி—வேள்வி.

வேள்வி செய்து விரும்பியத்தை அடையலாம். இஷ்டி என்பது விருப்பம் என்று பொருள்படும். விரும்பியதைத் தரும் வேள்வியை அதனுல் இஷ்டி என்றனர். அசுவமேத யாகம், இராசசூய யாகம், புத்திரகாமேஷ்டி யாகம் என்ற யாகங்கள் அவரவர்விரும்பியதைப் பெறுவதற்குச் செய்யப் பட்ட யாகங்கள் என அறியலாம். வேள்விகள் பல என்ருலும் அவை எல்லாவற்றுக்கும் தலைவன் முருகவேளே. அவன் வேள்விகளைக் காத்து விரும்பியதை அருளும் அக்கினிபூ என்பதற்கொரு சான்று காண்போம்.

காசிப முனிவருக்கு மனைவிமார் பதின்மூவர். அவர்களுள் திதி மூலம் அசுர்ரும் அதிதி மூலம் தேவர்களும் பிறந்தனர். இருபாலரும் போர் செய்தனர். அசுரர் பலர் இறந்தனர். விட்டுணுவால் அமுதம் உண்ட தேவர்கள் அசுரர்களையே அழித்தனர். அதிதி மனம் வருந்தினுள். தம் புதல்வர்களைக் கொன்ற இந்திரனையும்

திருமாலையும் கொல்லும் வலிமையுள்ள புதல்வனைத் தருமாறு காசிபரை வேண்டினுள். அவரும் அதற்கு இசைந்தார். இவ்விருப்பத்தை நிறைவேற்றும் வேள்வித் தலைவன் கந்தவேளே என்று எண்ணிப் புத்திரகாமம் எனும் தலம் அடைந்தார். அத்தலத்தில் தம் கருமம் நிறைவேறத்தக்க யாகசாலை மானவசூத்திரமாகலின் அதனை வகுத்தார். பின்னும் செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தார். யாகம் செய்வதற்கு மிகவும் முக்கிய மான அதர்வசிரோ மந்திரங்களையும், சிவாகமமந்திரங் களையும் விதிப்படி கூறிச் செய்தார்.

இந்திரனும் திருமாலும் இதனை அறிந்தனர். வேள்வி நிறைவேறினுல் தமக்கு ஆபத்து என்று நினைத்தனர். தேவர்கள் மேலும் அபிசார வேள்வி செய்தனர். அதன் பயனுக மாரன், மலையன் என்ற அசுரர்கள் தோன்றினர். அவர்களை ஏவி முனிவர் வேள்வியை அழிக்கத் தூண்டினர். அவர்கள் வேள்வியையும் முனிவரையும் தாக்கினர். முனிவர் வேள்லித் தலைவனுன வேலிறைவனைத் தன்னையும் வேள்வியையும் காக்கும்படி துதித்துச் சரணடைந்தார். முருகப்பெருமான் தோன்றி ''அஞ்சற்க! உம்மையும் உம் வேள்வியையும் காப்போம். வேள்வியை முடித்துப் பயனைப் பெறுதி'' என அருள்பாலித்தார். எதிர்த்துவந்த மாரனையும் மலையனையும் தமது திருக்கரத்திலிருந்த பல்ல வத்தை எறிந்து வீழ்த்தினுர். இதனுல் வேள்வியைக் காக்கும் தலைவனுகப் போற்றப் பெற்றுர்.

மேற்கோள் :

மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்.

—திருமுருகாற்றுப்படை.

''அந்தண்மறை வேள்வி காவற்கார''
''சுபி அர்க்ய சோமாசி யா குரு''

—திருப்புகழ்.

27. ஓம் அபேத பதயே நமோ நம:

பொருள்: வேற்றுமையற்ற தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: அபேதம்—வேற்றுமை இல்லாமை.

படைப்புக்கடவுள் ஒருவனே வேற்றுமை ஒன்றுமில்லாதவன். அவனால் படைக்கப்பட்டவை அனைத்தும் வேற்றுமை உடையன. அந்த வேற்றுமைகள் உருவம், பெயர், குணம், சொல், காலம் இடம் எனப் பலவாகும். தத்துவங்கள் முப்பத்தாறு என்பர். அவற்றைக் கடந்திருப்பதால் தத்துவாதீதன் என்கின்றோம். காலத்தைக் கடந்தவன் ஆதலால் காலாதீதன். குணத்தைக் கடந்தவன் ஆதலால் குணாதீதன். படைப்புக்குட்பட்டவை அனைத்துமே கண்டப்பொருள்கள். அதாவது ஓர் எல்லைக்குட்பட்டவை. படைப்புத் தொழிலை நடத்தும் கடவுளோ அகண்டப் பொருள். அதாவது எல்லையைக் கடந்தபொருள்.

அப் பரம்பொருளை நிட்களம், நிராலம்பம், நிர்விகாரம், நிரதிசயம் என்பர். அதாவது, உருவமற்றது; பற்றுக்கோடற்றது;(ஆதாரமில்லாதது)வேறுபடும்தன்மை அற்றது; சுட்டியறியப்படாதது, என்று கூறுவர். உருவமுள்ள எந்தப் பொருளுக்கும் பற்றுக்கோடு தேவை. இறைவனே எல்லாப் பொருளுக்கும் பற்றுக் கோடாக இருப்பவன். அதனால் தனக்கொரு பற்றுக்கோடில்லாதவன். படைக்கப்படும் பொருள்க்ள் அனைத்தும் பிறத்தல் வளர்தல், முதிர்தல், இறத்தல் எனும் பல மாறுபாடுகளை அடைந்த வண்ணம் இருக்கின்றன. அவனே என்றும்,

இளமைக்காரனுக இருக்கின்றுன். மனம் வாக்கிற்கு எட்டாத பொருளாயிருக்கின்றுன். அப்பொருளேப் பரா காசம், சிதாகாசம், பரவெளி சிதம்பரம் என்றெல்லாம் கூறுகின்ருேம்.

இத்தகைய எல்லாம் கடந்த அபேதநிலேயுடன் எல்லாப் பொருளின் உள்ளும் புறமுமாகப் பிரிக்கமுடியாத அபேத நிலேயிலும் அப்பொருள் விளங்குகின்றது. அதனுல் தான் வான், காற்று, நெருப்பு. நீர், மண், ஆன்மா, சூரியன், சந்திரன் எனும் எண் பொருளேயும் அட்டமூர்த்தி என்கின்ருேம். இயங்கும் பொருளும் அவனே. மேலும் சிவத்தோடு சத்தி பிரிவின்றி இருக்கின்றது; சத்து எனும் சிவமும், சித்தெனும் தேவியும், ஆனந்தம் எனும் அறுமுகமும் பிரிவின்றி இருக்கின்றனர். ஒரு கட்டையில் நீளமும் அகலமும் கனமும் ஆகிய அளவைகள் பிரிவின்றி இருக்கின்றன. அதைப்போலச் சச்சிதானந்தப் பொருள் விளங்குகின்றது. இக்காரணத்தால் முருகப்பெருமான் வேற்றுமையில்லாத் தலேவனுவன். அவனே சிவதேசசு அல்லவா?

மேற்கோள் :

''நிட்கள நிராலம்ப நிருவிகார
நிரதிசய தத்துவமாய் ஈறில்லாத
கட்கருவிக்கு எட்டாத அகண்ட ஞான
ககனமெனவே எங்கும் நிறைந்து நிற்கும்.''
—பரிபூரணனந்தபோதம்.

''பெம்மான் முருகன் பிறவான் இறவான்.''

—கந்தரநுபூதி.

''அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
....

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி.''
''அட்டமூர்த்தி அழகன்.''

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.''

—திருவாசகம்.

அம்புவி முதலாம் பல்பே ரண்டமும் அங்கங்குள்ள
உம்பரும் உயிர்கள் யாவும் உயிரிலாப் பொருளும் மாலும்
செம்பது மத்தி னோனும் சிவனெடுஞ் செறிதல் கண்டோம்!;
எம்பெரு மானின் மெய்யோ அகிலமும் இருப்ப தம்மா!

''ஊரிலான், குணம் குறியிலான் செயல்இலான் உரைக்கும்
பேரிலான் ஒருமுன்இலான் பின்இலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக்கிலான், மேலிலான் தனக்கு
நேரிலான், உயிர்க்கடவுளாய் என்னுளே நின்றான்.''

—கந்தபுராணம்.

28. ஓம் சுபோத பதயே நமோ நம:

பொருள்: மெய்ஞ்ஞானம் அருளும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: சுபோதம்—மெய்யறிவு.

ஆன்மாக்கள் அஞ்ஞானத்திற் கட்டுண்டு கிடக்கின்றன. ஆன்மாக்கள் தற்சுதந்திரம் அற்றவை. அறிவித்தால் மட்டுமே அறியக்கூடியவை. இந்த நிலையில் வருந்தும் ஆன்மாக்கள் மீது இறைவன் கருணைகொண்டு படிப்படியாக அறியாமையைப் போக்குகிறான். ஞானத்தைப் புகட்டும் குருவாகின்றான். குரு என்ற சொல் கு=அறியாமை; ரு=நீக்குபவன் என்று பொருளாகும். இவ்வண்ணம் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டவல்ல தலைவன் அறுமுகக் கடவுளே. அதனால்தான் அருணகிரியாரும் ஞானபண்டித சுவாமி நமோ நமோ என துதிக்கின்றார். ''மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே! அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!'' என அறுமுகச் சிவத்தை மணிவாசகரும் போற்றுகின்றார்.

பாம்பனடிகள் தமது சுப்பிரமணிய வியாசத்தில் குமர குருபரன் பெருமையை அழகுறக் காட்டுகின்றார்.

''பிரமவித்தியா சம்பிரதாயப் பிரவர்த்தக தேசிக சிகாமணியாகிய குரு எனவே, அரனார்க்கும், அகத்தியனார்க்கும், நந்திதேவர்க்கும், தசரதராமர்க்கும், வாமதேவ முனிவர்க்கும், நாரதர்க்கும், பராசரபுத்திரர் அறுவர்க்கும் குருவாதல் பற்றி வேதவேதாந்தத்திற்கும், சித்தாந்தத்திற்கும் சகல கலைகளுக்கும் பரமாசாரியன் என்பது பெறப்படுமால். இதுபற்றியே அந்தச் சம்பவ காண்டம் 26ஆம் அத்தியாயத்துப் 15ஆம் சுலோகத்தில், ''அந்தக் கலியாண குணசீலரும் உலோக குருவுமான கந்தபிரான்'' எனவும், 32-ஆம் அத்தியாயத்துப் 16-ஆம் சுலோகத்தில், ''தேவ சேனாபதி ஜகத்குரு எனத் தேவர்கள் கூறி'' எனவும் 33ஆம்

அத்தியாயத்தில். 10, 11ஆம் சுலோகங்களில், ஜகங்கட்குக் குருவாகிய குஹமூர்த்தியானவர் எனவும், பிரமாண்ட புராணம் பிரமாவினுல் நாரதருக்கு உபதேசிக்கப்பட்ட ஷண்முக ஸஹஸ்ர நாமத்தில், 'ஜகத்குரு' எனவும் கூறுகின்றன. அரன் எனும் சுவாமிக்கு உபதேசித்ததுபற்றி அறுமுகதேவுக்குச் சுவாமிநாதன் எனவும் ஒரு திருநாமம் விளங்குகிறது. ஆன்மாக்களின் மூல அஞ்ஞானத்தைத் தொலைப்பவன் குரு எனவும் குரவன் எனவும் கூறப் படுவன்''.

அஞ்ஞானத்தைத் தொலைப்பதன் மூலம் மெய்ஞ் ஞானத்தை அருளுகின்ருன் என்க.

மேற்கோள் :

''நாத விந்துகலாதீ நமோ நமோ
வேதமந்த்ர சொருபா நமோ நமோ
ஞானபண்டித ஸாமீ நமோ நமோ''

''ஞானபண்டித நாதா நமோ நமோ',
''அரவு புனைதரு புநிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருளென அருளியபெருமாளே.''

அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியனும்

—திருப்புகழ்.

என்றலும் நகைத்து மைந்த எமக்கருள் மறையின் என்னுத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை என்னும்
ஒன்றெரு பதத்தின் உண்மை உரைத்தனன் உரைத்தல் கேளா
நின்றருள் புரிந்தான் என்ப ஞானநாயகனும் அண்ணல்.

—கந்தபுராணம்.

29. ஓம் வியூஹ பதயே நமோ நம:

பொருள்: சேனைகளின் படைவகுப்புத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: வியூஹம்—படைவகுப்பு.

போர்க்களத்தில் கைகலக்கும் இரு படைகளும் ஒவ்வொரு வகையான படை வகுப்புச் செய்துகொண்டு பண்டைக் காலத்தில் போர் செய்வது வழக்கம். வியூகம் எழுவகை உறுப்புடையதாய் நான்கு வகையுடையதாய் முப்பது விரி உடையதாய் வகுக்கப்படும் என இலக்கண நூல்கள் கூறுகின்றன. அரம் முதல் தோட்டி முடிய ஏழு உறுப்புக்கள் தண்டம், மண்டலம், அசங்கதம், போகம் என நான்கு வகைகள். பதினேழு தண்டவரி, இரண்டு மண்டலவரி, ஆறு அசங்கத வரி, ஐந்து போகவரி ஆக முப்பது வரி. இத்தனை நுட்பமாகப் படையை வகுத்து நிறுத்துவதற்கு வியூகம் என்று பெயர்.

மகாபாரதப் போரில் இந் நுட்பமான படைவகுப்புப் பாண்டவர்களாலும் கௌரவர்களாலும் மேற்கொள்ளப் பட்டது. அவற்றுள் சில; அசலவியூகம், காருடவியூகம், மகரவியூகம், கிரௌஞ்சவியூகம், சகடவியூகம், மத்த வியூகம் முதலியனவாம். இந்த வியூகம் செய்வதற்குச் சேனைத் தலைவனுக்கே அதிகாரம் உண்டு.

சூரனுடன் போர்புரிய அறுமுகப் பெருமான் சென்றார். அவருக்குத் துணையாக நவவீரர்களான, வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமேகச்சுரன், வீரபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் ஆகியோரும், ஓர் இலக்கம், (லட்சம்) வீரர்களும் சென்றார்கள். முருகப் பெருமான் இப்படைக்குத் தலைவனாக வீரவாகு தேவரை நியமித்தார். அவரின் கீழ்

படைகளின் கணத் தலைவர்களாக மற்றைய எண்மரும் பொறுப்பேற்றனர். இவர்களுடன் பூத வீரர்கள் இரண்டாயிரம் வெள்ளம் சென்றனர். இப் பூதர்களுக்குக் கணத்தலைவர்ளாகச் சிறந்த வீரர்களை நியமித்தார்.

அசுரர்கள் முறையான போரை விடுத்து மாயப் போர் செய்தார்கள். அதனால் முறையான வியூகங்கள் அமைக்கப்படவில்லை. ஆனால் படைகள் முறையாக வகுக்கப் பெற்றன. இவ்வாறு ஒப்பற்ற முறையில் வகுக்கப்பட்ட படைகளுக்குத் தலைவன் முருகனே. அவரே தேவசேனாபதி.

மேற்கோள் :

''பரசூரர்—சேத தண்ட விநோதா நமோ நம''

—திருப்புகழ்.

30. ஓம் மயூர பதயே நமோ நம :

பொருள் : மயூர நாதனுக்கு வணக்கம்.

விளக்கம் : முருகப் பெருமானுக்கு மயில் வாகனமாகும். ஆகையால் பெருமான் அதற்குத் தலைவர் என அழைக்கப் பெறுகிறார்.

பெருமான் ஊர்தியாகக் கொண்ட மயில்கள் மூன்று ஒன்று பிரணவ சொரூபமான மயில். இன்னொன்று இந்திரன் ஆகிய மயில். மற்றொன்று சூரன் ஆகிய மயில்.

ஐயன் அம்மையப்பரிடம் மாதுளங்கனி பெற எல்லா உலகங்களையும் நொடிப் பொழுதில் சுற்றி வந்தார். அப்போது வாகனமாய் அமைந்தது பிரணவ சொருப

மயிலன்றே! ஆனதனி மந்த்ரரூபநிலை கொண்டது ஆடு மயிலென்பது அறியேனே' என மயிலைப் பிரணவ சொரூபம் என்று அருணகிரிநாதரும் போற்றுகின்றார்.

முருகப் பெருமான் சூரனேடு போர் புரியும்போது அவன் பல மாயங்கள் செய்தான். தன் மாயத்தால் சக்கரவாகப் பறவையானன். அதனேடு போர்புரியப் பெருமான் தேரை விடுத்துப் பறவை வாகனம் வேண்டும் என நினைத்தார். இந்திரனை அந்த நோக்கத்துடன் பார்த்தார். அவன் மயில் வாகனமாகச் சென்று ஐயனைச் சுமக்கும் பேறு பெற்றான்.

சூரனுடன் கடும்போர் நிகழ்த்தும்போது கடல் நடுவில் சென்று விண்ணும் மண்ணும் உயர்ந்து எட்டுத் திக்கும் பரந்து நிற்கும் ஒரு மாய மாமரமானன். ஐயன் வேல் சென்று அதனை இரு கூறாக்கியது. உடனே தன் சுய உருவத்தோடு போருக்கு வந்தான். வேலானது அவனை இரண்டாகப் பிளந்தது. பிளந்த கூறுகளில் ஒன்று சேவலாகவும் ஒன்று மயிலாகவும் உருமாறின. ஐயன் அவற்றின்மீது அருள்நோக்கத்தை அளித்து ஆட் கொண்டார், மனம் தெளிவுற்று அவை அடங்கி நின்றன. சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் இருந்து வரும்படி கட்டளையிட்டருளினர். சூரன் அன்று முதல் அறுமுகப் பெருமானைச் சுமக்கும் அரிய பேற்றினைப் பெற்றான்.

மயில் வாகனத்தின் தலைவன் கந்தவேள். மயில் நம் கடவுள் என மயில் விருத்தம் கூறுகின்றது. இந்த மூன்று மயில்களுக்கும் தலைவனுக இருக்கும் பெருமானைச் சுவாமி கள் மயூரபதயே என வணங்குகின்றார்கள்.

"நானவித விசித்திரதர அலங்கார முக்குணப் பிரபஞ்ச நாமரூப விலாசமான கலாபத்தை விரித்தாடா

நின்ற மகாமாயை எனும் மயூரத்தில் எழுந்தருளி இருப்பவன் எனவாம்'' என்பது சுவாமிகள் திருவாக்கு.

மேற்கோள் :

''ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடு மயிலென் பதறியேனே.''

''தோகை மயில் வாகனப் பெருமாளே.''

''தனிமயில் ஏறும் பெருமாளே.''

''இந்தா மயில் வாகனர் சிட்டிது''

''மயில் வாழ்வே''

''மயூர வாகன தேவா''

''அனல் வேல் விடு மயில் வீரா,''

''வேந்த குமாரகுக சேந்த மயூர''

—திருப்புகழ்.

''ஒரு நம்பிரான் ஆன மயிலை''

—மயில் விருத்தம்.

31. ஓம் பூத பதயே நமோ நம :

பொருள் : பூத வீரர்கள் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : பூதம்—பூத வீரர்கள்.

அறுமுகக் கடவுள் சூரபன்மனுடன் போர் புரியச் சென்றார். அவருக்குத் துணையாக இரண்டாயிரம் வெள்ளம் பூத வீரர்களும் சென்றார்கள். இப் பூத வீரர்களின் கணத் தலைவர்களாக நூற்றெட்டு மாவீரர்கள் சென்றார்கள். அவர்கள் வருமாறு :

சுப்பிரன், மேகமாலி, சுவேசீரிடன், கபாலி, அப் பிரசித்து. சித்திராங்கன், சுவாலதாலு, வச்சிரன், வீமன், உக்கிரன், உக்கிரேசசன், பிப்பிலன், அந்தி, சேனன், பிரமசன், பிரமசேனன், பதுமன், கராளன், தண்டன், பத்திரன், பரிகநேமி. உதவகன், புட்பதந்தன், உருத்திரா காரன், வீரன், மதிசயன், கேது. மாலி, வக்கிரன், சாந் தன், பிரமகேசன், அதிபதி, கலிங்கன், கோரன்,அச்சுதன், அசலன், சித்திரசேனன், பூரி, சுசீலன், மாசயன், சிங்கன், உபதிட்டன், சயன், ஈசன், மத்தகன், மதங்கன். கண்டி, மகாபலன், சுவேதன், நீலபத்திரன், சுவாகு, அண்டா பரணன், காகபாதன், பிங்கலன், சமானன், நிகும்பன், கும்பன், சங்கபாலன், விசாகன், சதநாவன், அயக்கிரீவன், அங்கையாயிரத்தன், செங்கணயுத்தன், அந்தன், வாமன், மங்கலகேசன், சோமன், வச்சிரமாலி, கண்டன், அசமுகன், சரபன், குந்தன், ஆடகன், வந்தன், மேகன், விசயன், வித்துருமன், தண்டி, வியாக்கிரன், காலபாசன், தசமுகன், குமுதன், பானு, தனஞ்செயன், இடபரூபன், சசிமுகன், அனலகேசன், சுபத்திரன், கேது, மோகன், மத்தன், உன் மத்தன், நந்தி, மனோபவன், வாயுவேகன், ஆயிரம் கால்கள் உடையவன், பானுகம்பன், பதங்கன், சுத்தன், அனிகன், சீதன், சுனுதன், சுமாலி, மாலி, அத்திரி, அவுணர் கூற்றன், அரிகேசன், சுவாலகேசன் என்பவர்களாவர்.

இந்நூற்றெட்டுக் கணத்தலைவர்களும் தமக்கு ஒப் பாரும் மிக்காரும் இல்லாதவர்கள். பொங்கிவரும் சினம் உடையவர்கள். புவனங்கள் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழிப்பதென்றாலும் அழித்துவிடுவார்கள். போர்த்தொழில்கள் எல்லாவற்றிலும் சிறந்தவர்கள். சந்தேகம் இல்லாத வலிமையை உடையவர்கள். ஏய்! எனக் கூறுமுன்னே இவர்கள் சண்முகநாதனைச் சூழ்ந்த னர். இவர்கள் சூழ்ந்த நொடியில் இரண்டாயிரம் வெள் ளம் பூதவீரர்களும் சூழ்ந்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பூதவீரர்கள் ஆரவாரம் விண்ணையும்

எல்லாத் திசைகளையும் சென்று தாக்கியது. கடல் கலங்கியது. மேகங்கள் அழிந்தன. அண்டங்கள் நெக்குடைந்தன. ஆதிசேடனும் நடுக்கமுற நடந்து சென்றனர்.

அரும்பெரும் ஆற்றல்மிக்க கணத்தலைவர்களுள் விசயன் ஒருவனே சூரபன்மன் மைந்தர் மூவாயிரவரையும் கொன்ருன் என்ருல் இவ்வீரர்கள் ஆற்றலை விளக்க வேண்டியதில்லை. இத்தகைய பூதகணத் தலைவர்களுக்கும் பூத வீரர்களுக்கும் ஒப்பற்ற தலைவஞகக் கந்தவேள் எழுந்தருளிஞர்.

மேற்கோள் :

''இங்கிவர் பூதவெள்ளத் திறையவர் ஒருநூற் றெண்மர்
பொங்குவெஞ் சினத்தர் எல்லாப் புவனமும்
அடவென்ருலும்
அங்கொரு நொடிப்பின் முன்னர் அடுபவர் ஆடல் மிக்கார்
சங்கையில் வலியோர் யாருஞ் சண்முகத் தவனைச்
சூழ்ந்தார்.''
''ஆயிரத் திரட்டி வெள்ளத் தனிமுகம் எழுந்த வன்றே.''

—கந்தபுராணம்.
(18, 19)

32. ஓம் வேத பதயே நமோ நம :

பொருள் : வேதங்களுக்குத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : வேதம்—நான்மறைகள். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாகும். சமஸ்கிருதமாகிய வேதம் எனும் சொல் வித்-

எனும் அடிச் சொல்லினின்றும் தோன்றிற்று வித் என்பது (ஞானம்) அறிவு எனப் பொருள் படும். அவ்வேதம், உலகம், உயிர், அவற்றின் தோற்றம் மறைவு, இறைவன் இயல்பு, யோகமுறை, ஞானமுறை முதலியன எல்லாம் அறிவிக்கும் ஆற்றலுடையது. இதற்கு ஆதிநூல், ஆரணம், எழுதாக்கிளவி, அத்தியாயம், அந்தணர் வாக்கு, ஓத்து, சாகை' சுருதி, நிகமம், மறை, முதனூல் எனும் பெயர்கள் உண்டு.

ஈசுவரனது திருவாக்கினின்று வெளிப்பட்டதால் வேதம் எழுதாக்கிளவியாகும். அவ்வேதம் உதித்த முறை காண்போம்

பரமேசுவரனது திருவருளால் நாதப்பிரமமாகிய குடிலையிலிருந்து அகார உகார மகாரங்களாகிய மூன்று பிரணவம் விந்து நாதங்களோடு தோன்ற அவற்றிலிருந்து அற்புதமும் வேதமந்திர ரூபமும் பலமும் பெருகுதற்கு ஏதுவான மூன்று பேதவாதத்தாற் காயத்திரி பிறந்து அது சமஷ்டி வியஷ்டி என இரண்டாகி அவை ஈசுவரனுடைய (பூர்வமுகம்) கிழக்கு முக முதல் நான்கு முகங்களின் வாயிலாக இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களையும் நல்கின. அவற்றுள் அந்த நாதமயமான பிரணவமும் அகாராதி அக்ஷரங்களும் உருவுற்று நிற்கும்படி ஈசன் கீழ்த்திசை முகத்தினின்று இருக்குவேதம், இருபத்தொரு சாகையாகவும், தென்திசை முகத்தினின்று யசுர் வேதம் நூற்றொரு சாகையாகவும், மேற்றிசை முகத்தினின்று சாமவேதம் ஆயிரம் சாகையாகவும், வடதிசை முகத்தினின்று அதர்வணவேதம் ஒன்பது சாகையாகவும் தோன்றின.

அக்கினியிலிருந்து இருக்கையும், வாயுவிலிருந்து யசுரையும், சூரியனிலிருந்து சாமத்தையும், பிரமதேவர் வெளிப்படுத்தினுர் என்று மநுஸ்மிருதி கூறும். இருக்கு மந்திரம் எனவும் யசுர் கட்டளை எனவும், சாமம் துதி எனவும் அதர்வணம் மூன்று வேதங்களிலும் கலப்பு எனவும் கூறுவர்.

வேதங்கள் கருமகாண்டம், உபாசனு காண்டம், ஞானகாண்டம் என வகுக்கப்படும். உபாசனு காண்டம் மற்ற இரண்டிலும் சேரும் தகுதி உடைத்து. ஆதலால் காண்டங்கள் இரண்டே: கருமகாண்டம் என்பது சொர்க்க போகம் முதலியன அளிக்கும் யாகம் முதலிய கருமங்களை உணர்த்தும். ஞானகாண்டம் என்பது ஜீவான்மாவானது பரமான்மத் தன்மை அடையும் நெறிக்குரிய உபாசனை உணர்த்தும்.

இத்தகைய வேதங்களுக்குத் தலைவனுக அறுமுகப் பெருமான் அழகுற விளங்குகின்ருர்.

மேற்கோள் :

''வேதாகம ஞான விநோதமனோதீதா''

—கந்தரநுபூதி.

''வேதாகம சித்ர வேலாயுதன்.''

—கந்தரலங்காரம்.

''நாலு மறைப்—பொருளோனே
நாக கிரிப்—பெருமாளே''
''நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே''

—திருப்புகழ்.

33. ஓம் புராண பதயே நமோ நம:

பொருள் : புராணங்களுக்குத் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : புராணம்—பழைய வரலாறு.

புராணங்களை வேதங்களின் உப அங்கம் என்பர். பரமேசுவரன் உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலியன கூறும் வேத வாக்கியப் பொருளைச் சரித்திர ரூபமாக விரிவாக விளக்குவது புராணம். ஆகையால் பழைய வரலாறு எனக் கூறப்படுகின்றது.

புராணங்கள் பதினெட்டு. அவையாவன, சைவம், ஸ்காந்தம், லிங்கம், கூர்மம், வாமனம். வராகம், பௌஷியம், மச்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் எனும் பத்தும் சிவபுராணங்கள். நாரதீயம், பாகவதம், காருடம் வைணவம் எனும் நான்கும் விஷ்ணுபுராணங்கள். பிரமம் பத்மம் இரண்டும் பிரம புராணங்கள். பிரமகைவர்த்தம் சூரியபுராணம். ஆக்கினேயம் அக்கினிபுராணம், இப் பதினெண் புராணங்களின் துணிவெடுத்துக் கூறுகின்ற உசனம், கபிலம், காளி, சனற்குமாரம், சாம்பவம், சிவ தன்மம், சௌரம், துருவாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், மானவம், வாசிஷ்டலைங்கம், வாருணம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம் எனும் பதினெட்டும் அவ்வப் பெயருடையார் பெயர்களால் விளங்கிய உபபுராணங்களாம்.

பார்க்கவ புராணமே விநாயகபுராணம். சிரஞ்சீவியாகிய வியாசமுனிவர் அருளிச் செய்த சிவரகசியமும், மகாபாரதமும், வான்மீகர் அருளிச்செய்த இராமாயணமாகிய இதிகாசமும் ஆகிய மூன்றும் புராணங்களுள் அடங்கும்.

இங்குக் கூறப்பெற்ற புராணங்கள் எல்லாவற்றுக்கும் தலைவன் அறுமுகனே. மேலும் புராணங்களிற் சிறந்த ஸ்காந்த மகாபுராணத்தின் தலைவனும் ஆவன்.

திருச்செந்தூர்த் தலத்தில் முருகப்பெருமானை மட்டுமே வழிபடும் திரிசுதந்திரப் பிராமண குலத்தவர் இரண்டாயிரவர் இருந்தனர். அவர்களுள் வெற்றிமாலை ஐயர் என்பவர் கல்வியில் நாட்டமில்லாதவர். அதனுல் மடப்பள்ளியில் திருவமுது செய்து கொடுக்கும் பணியிலமர்ந்தார். முருகப்பெருமான் திருவருளால் நைவேத்தியம் செய்யக் காலம் தாழ்ந்தது. இதைக்கண்டு அத் தலத்தோரும் கோயிலில் உள்ளோரும் சினமுற்றுக் கடுந்தண்டனை கொடுத்தனர். துன்பத்தைப் பொறுக்கமுடியாமல் அன்றிரவு உயிரை மாய்க்கக் கடலில் வீழ்ந்தார். முருகப் பெருமான் இவர் கையைப்பற்றிக் கரை சேர்த்தருளினுர்.

''அந்தணனே! ஒன்றற்கும் அஞ்சற்க. நாம் இத் தலத்திலிருக்கின்ருேம். நின்னை யாவரும் போற்றி வணங்கும் வரத்தை அளிப்போம். இத்தல மான்மியத்தைப் பாடுதி', என்றருளினுர். வென்றிமாலை ஐயர் பரவசமடைந்து பெருமானை வணங்கி, ''நெடுங்கணக்கு ஒன்றும் அறியாத நாயேன் எவ்வாறு பாடுவேன்'' என்ருர். ''செவ்வல் எனும் தலத்தில் கிருட்டிண சாத்திரியிடம் செல்க. அவர் உணர்த்துவார்'; என்று சொல்லி உருக் கரந்தருளினர். ஐயரும் அங்குச் சென்று வடமொழியில் திருச்செந்தூர் மான்மியத்தைக்கேட்டு மிகச்சிறந்த கவி நயத்தோடு சாத்திரி வியக்கும் வண்ணம் திருச்செந்தூர் புராணத்தைப் பாடி முடித்தார். அதைத் திருச்செந்தில் நாதன் சன்னிதியில் அரங்கேற்ற விரும்பினுர். திரிசுதந்திரப் பிராமணர்கள் பரிசாரகன் அரங்கேற்றுவதாவது என்று தடுத்தார்கள். ''மதிப்பார் மதிக்க', என்று புராணச்சுவடியைக் கடலில் வீசிவிட்டார். அது கடலில் மிதந்துசென்று யாழ்ப்பாணத்தை அடைந்தது. அடைந்த

இடம் பனைமுனை. முருகபக்தியில் திளைக்கும் முருகதாசர் கனவில் முருகக்கடவுள் தோன்றித் திருச்செந்தூர்ப் புராணம் பனைமுனைக் கடற்கரையோரம் ஒதுங்கியுள்ள தைத் திருவாய்மலர்ந்தருளினர். அவர் எல்லையில்லா மகிழ்வுற்று அங்குச் சென்று அச்சுவடியைக் கண்டு எடுத் தார். தமது பூசையில் வைத்துப் போற்றினுர். நாள் தோறும் அதனைப் பிரதிகளாகக் கையால் எழுதிப் பல முருகனடியார்களுக்கு வழங்கிவந்தார். ஒரு சமயம் அம் முருகதாசர் இருந்த ஊரில் கடும் புயல் வீசிப் பெரும் சேதம் விளைவித்தது, வீடுதோறும் பலர் இறந்தனர். ஆனுல் அப் பெரியார் இருந்த வீடும், அவர் தெருவும் எவ்விதச் சேத மும் அடையவில்லை, அதற்குக் காரணம் திருச்செந்தூர்ப் புராணமே. அப்புராணத்திற்குரிய தலைவன் முருகன் அல்லவா? இவ்வாறு பழைய புராணங்களுக்கு மட்டு மல்லாமல் புதிய புராணங்களுக்கும் அறுமுகனே தலைவன்.

மேற்கோள் :

''கந்தவே ளோடிவந்து வேதியனைக் கைப்பிடித்து ஒன்றுக்கும் அஞ்சேல்

அந்தணு அவுணர் குலத்தை வேரறுத்தே அமரரைப் புரந்து செந்தூராம்

இந்த மாதலத்தை உற்றனம் ஆதலினுல் இத்தல மகிமையாம் வடநூல்

செந்தமி ழாலும் சிறக்கநீ இனிது செப்புவாய் என்று உரைசெய்தான்.''

—திருச்செந்தூர்ப்புராணம்.

34. ஓம் பிராண பதயே நமோ நம:

பொருள் : ஆன்மாவின் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : பிராணன்—ஆன்மா (உயிர்)

முருகக் கடவுள் எல்லா உயிர்களுக்கும் தலைவன்-ஆன்மாவிற்குப் பல பெயர்கள் உண்டு, அவை அனைத்தும் பசு என்ற ஒரு சொல்லில் அடங்கும். ஆன்மா பாசத்திற் கட்டுண்டமையால் பசு எனப்பட்டது. அதற்கே—அகர்த்தா, அணு, சீவான்மா, சுதந்திரஈனன், கிஞ்சிஞ்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான். சேதனன், ஆதன், இயமானனன், உயிர், ஆவி, புத்தி. **பிராணன்**, சதசத்து, புற்கலன், தேகி எனும் பெயர்கள் உள்ளன என்று நூல்கள் கூறும். இப் பிராணன் அனாதி நித்தியப் பொருள் என்றும் அவை கூறும்.

பிராணனுக்கு தற்சுதந்திரமில்லாமை, முழு அறிவு இல்லாமை, சார்ந்திருக்கும் பொருள் தன்மையைத்தான் அடைதல் என்ற மூன்று நிலைகள் உண்டு. பிராணனை இறைவன் இயக்குவதால் அது தற்சுதந்திரம் அற்று இருக்கிறது. அவன் அறிவித்தால் மட்டும் அறியக் கூடியதாயிருப்பதால் முழுமையான அறிவில்லாமல் இருக் கிறது. அது ஆணவ மலச் சார்பிலிருக்கும் போது அறியாமைப் பட்டிருக்கும். இறைவனைச் சார்ந்திருக்கும் போது அறிவு பெற்றிருக்கும். ஆதலால் உயிர் சார்ந்த தன் வண்ணமாக இருக்கும்.

இவ்வுயிர் சத்தும் அசத்தும், சித்தும் அசித்தும் இல்லா மல் இடை நிகர்த்ததாயிருத்தலால் சதசத்து என்றும் சித சித்து என்றும் பெயர் பெறும். சிற்றறிவு, சிற்றிச்சை, சிறுதொழில் ஆகியவற்றிற்குரியது. இறைவனைப்போல் பேரறிவும், பேரின்பமும், பேராற்றலும் உடையதன்று.

உயிர் அணு அளவாகவும் வியாபகமாகவும் இருக்கின்றது. ஆணவ மலம் நீங்கி இறைவனைச் சார்ந்து அறிவுடன் விளங்கும் நிலையே உயிர்க்குச் சுத்தாவத்தை ஆகின்றது.

உயிர்கள் ஆணவமலம் மட்டும் உடைய விஞ்ஞான கலராகவும், ஆணவமும் கன்மமும் உடைய பிரளயா கலர் ஆகவும், ஆணவம், கன்மம் மாயை எனும் மூன்று மலங்களுடைய சகலராகவும் மூவகையாக இருக்கும்.

இந்தப் பிராணன்களுக்கு எல்லாம் தலைவனாக இருந்து இயக்குபவன் குகேசன். உயிர் என்னும் உடம்பில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி முருகனே.

மேற்கோள் :

''செலுத்துதல் என்னும் சொல்லே கடவுதல் எனச் செந்நூல்கள்
பலத்துடன் உரைக்கு மாற்றல் பசுக்களின் உளத்தே நின்று
செலுத்துளமாம்................கடவுள்.''
—செக்கர்வேள் செம்மாப்பு.

''ஸ்வதச் சிவ : பசுபதி:''
''ஸ்வயம் பசுபதி:''
—பாசுபதப்ரஹ்மோப நிடதம் (அதர்வணம்)

35. ஓம் பக்த பதயே நமோ நம:

பொருள் : அடியார்களின் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : பக்தர்—முருகப் பெருமானிடம் அன்பு செலுத்தும் அடியார்கள்.

ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதே வாழ்க்கைப் பயன் என்று எண்ணுவோர் பக்திமான்கள்.

முருகப் பெருமான் பக்தஜனப் பிரியன். சாலோகத் தொண்டர், சாமீபத் தொண்டர், சாரூபத் தொண்டர் பெருமானுகவும் விளங்குகின்ருன். அகத்தியர், நக்கீரர், நாரதர், அருணகிரியார், சிதம்பர சுவாமிகள், குமர குருபரர், வடலூர் வள்ளல், குமரகுருதாசர் முதலிய எண்ணற்ற பக்தர்களுக்கு வேலிறைவன் தலைவன் அன்ருே?

பக்தி என்பன பகவானிடத்தில் செலுத்தப்படும் அன்பாகும். மக்களுக்குள் ஒருவர் மீது மற்றவர் அன்பு கொள்ளும்போது முன்னவரைப் பற்றிய சிந்தனை தானுகவே பின்னவர்க்கு உண்டாகும். அதுபோலே பகவானிடத்தில் அன்பு உண்டாகும்போது அவரைப்பற்றிய சிந்தனை தானுகவே உண்டாகிறது. பக்தி முதிரும்போது இறைவனைப் பற்றிய நினைவு பக்தனின் உள்ளத்தில் இடைவிடாது நிகழ்கிறது. தாய்க்குத் தன் முதற் குழந்தையின் மீதும், உலோபிக்குப் பணத்தின் மீதும், நாயகிக்குத் தன் கணவன் மீதும் எப்படி இடைவிடாத நினைவு செல்லுமோ அப்படியே அன்பினுல் எண்ணெய்யின் தாரைபோல் இடையருத நினைவு இறைவனை நோக்கிச் சென்று கொண்டேயிருக்கிறது. வேருெரு பொருளிடத்தில் செல்வதில்லை.

இத்தகைய பக்தி அழியாத் தன்மையுடையது. இது, ''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,'' ''காட்டக் கண்டு,[5]'' என்றபடி தானுக வருவது. அடக்கினுலும் அடங்காது; இதைப் பெற்றவன் அழிவில்லாதவனுகிருன், திருப்தியுள்ளவனுகிருன். ஆசையும், சோகமும், துவேஷமும் அவனைவிட்டு நீங்குகின்றன. அவன் சாந்தியுடையவனுகிருன். இடையிடையே மெய் மறந்தவனுய்ப் பேரின்பத்தில் மூழ்குகிருன்? தழதழத்த குரலில் மயிர்ச்சிலிர்ப்

போடு பேசுவான்; ஆனந்தக் கண்ணீர் சொரிவான். அவன் பிரேமையின் இயல்பு உரைக்கக் கூடியதன்று.

பக்தி வளர்வதற்கு இறைவனைப்பற்றிக் கேட்டல், சொல்லுதல், சிந்தித்தல் ஆகிய மூன்றும் அவசியம். தொண்டு செய்தல் (பாதசேவை), வழிபாடு (அர்ச்சனம்), வணக்கம் (வந்தனம்) அடிமையாதல் (தாஸ்யம்), நட்புறவு (ஸாக்கியம்) தன்னை ஒப்படைத்தல் (ஆத்ம நிவேதனம்) என்னும் ஒன்பது செயல்களும் இஷ்ட தெய்வத்தின் மீதுள்ள பக்தியைப் பெருகச் செய்வன்வாம். ஆரம்ப பக்தி அல்லது அபரபக்தி, இராகபக்தி அல்லது பரபக்தி, பிரேமபக்தி எனப் பக்தி நிலைகள் உள்ளன. இவற்றுள் எந்த நிலையில் பக்தி செய்யும் பக்தர்க்கும் அறுமுகப் பெருமானே தலைவன்.

மேற்கோள் :

''இரவு பகலற இகலற மலமற
இயலு மயலற விழியினி ரிழிவர
இதய முருகியெ ஒருகுள பதமுற.''
''சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர்—பெருமாளே''

—திருப்புகழ்.

''மாற்றஞ்செய் வன்மனக் கல்லைப்—பத்தி
மார்க்க குகைதனில் வைத்தே உருக்கி
ஊற்று குகன்பதந் தன்னில்—அந்த
உத்தம மான மனேலயம் எய்தும்''

—குமரகுருதாச சுவாமிகள் பாடல்.

36. ஓம் முக்த பதயே நமோ நம:

பொருள் : பாச பந்தங்களினின்றும் விடுபட்டவர் களுடைய தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : முக்தர்—முத்தி அடைந்தவர்.

முத்தி அடைவதற்குப் பாச பந்தங்களினின்றும் ஆன்மா விடுபடவேண்டும். பாசம் என்பது யான் எனது என்ற அகப்பற்றும் புறப்பற்றுமாகிய பந்தம் என்னும் ஆணவமலத்தையும், இன்ப துன்ப நுகர்ச்சியான வினை களையும், நுகர்தற்குரிய உடம்பு முதலானவற்றையும் குறிக்கும். இவை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாம். உயிர்களைக் குற்றப்படுத்துவதால் மலம் என்றும் கட்டுவதால் பாசம் என்றும் பெயர் பெறும்.

இம் மும்மலக் கட்டிலிருந்து உயிர்கள் விடுபட வேண்டும். இவ்வாறு விட்டவர்களே ஜீவன் முக்தர்கள். அவர்கள் மெய்ப்பொருளை நேரடியாக உணர்ந்து அனுபவிப்பார்கள். பழவினைகளை முற்றிலும் அழிப் பார்கள். புதிய வினைகள் அவர்களைச் சேரமாட்டா. பிராரத்த வினைகளை மட்டும் அனுபவித்துக் கழிப்பார்கள்.

ஐயப்பாடுகள், பொய்யறிவுகள், இருவினைகள் முதலிய அறியாமையின் விளைவுகள் அழிந்து போனதன் காரணமாக எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபட்டு பரம் பொருளிடத்தில் நிலைபெற்றிருப்பவர் ஜீவன்முக்தர். இந்த உடம்பினாலும் குருடு, தளர்ச்சி, ஆற்றாமை முதலிய வற்றோடு கூடிய புலன்களாலும், பசி, தாகம், துன்பம், மயக்கம் முதலியவற்றோடு கூடிய மனத்தாலும், பயன் களைக் கொடுக்கத் தொடங்கிவிட்ட பிராரத்தகன்மங்களின் நிகழ்ச்சியை அவன் பார்க்கிறான். அப்படி நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போதும் அவற்றை

உண்மை என்று பார்ப்பதில்லை. காரணம் அவை மெய் யுணர்விஞல் இல்லா தொழிகின்றன என்பதே. மாய வித்தை நடக்கும்போது அதைப் பார்க்கின்றவன் உண்மை என்று நம்புவதில்லை, அதைப் போலவே இங்கும்.

ஜீவன் முக்தர் எல்லா நன்மைஞக்கும் தீமைகளுக்கும் பாராமுகமாய் இருப்பர். ''நான் பரம்பொருளை உணர்ந்து விட்டேன்'' என்று அகந்தை கொள்ளமாட்டார். அடக்கம், அஹிம்சை. ஞானசாதனங்கள் ஆகியவை அணிகலன்கள் போல அவரைத் தொடரும். முயற்சியின்றி இவற்றைப் பெறலாம்.

ஜீவன்முக்தர் தம் மனத்தின் நிலைகளையும் ஒளிபெறச் செய்து கொண்டு பிராரத்த கன்மங்களின் பயனுக வந்ததும், தன்னிச்சையிஞலோ, பிறருடைய இச்சையி ஞலோ அல்லது தன்னுடைய இச்சைக்கு எதிராகவோ உண்டானதுமான இன்பத்துன்பங்களைச் சரீரத்தின் யாத்திரைக்காக மட்டிலும் நுகர்ந்து கொண்டிருப்பர். பிராரத்த கன்மங்கள் முழுவதையும் தீர்த்த பின் அவருடைய உயிர் பரம்பொருளில் ஒடுங்குகின்றது. ஜீவன் முக்தரானவர் சதேக முத்தி அல்லது விதேக முத்தி அடைந்து பரமுத்தராவர். அஞ்ஞானமும் அதன் விளைவு களும் அழிந்துபடுகின்றன. அப்பும் உப்பும் கலந்தாற் போல் இரண்டறக் கலந்து நிற்பதே, அதாவது இறை வனும உயிரும் கலந்திருப்பதே பரமுத்தி ஆகும்.

அறுமுகப் பெருமான் ஜீவன் முக்தர்களுக்கும் பர முக்தர்களுக்கும் தலைவன் ஆவன். அவனே முத்தியை வழங்கும் முத்தன்; முத்தர்கள் தலைவன்.

மேற்கோள் :

''பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று யாதுமின்றி அறுதலே''

—திருவாசகம்.

''முத்திக்கொரு வித்துக் குருபர''
''முத்திக்குக் காரண மானது''
''முத்தனுமாறெனைப்—பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு—அருள்வாயே.''

—திருப்புகழ்.

37. ஓம் அகார பதயே நமோ நம:

38. ஓம் உகார பதயே நமோ நம:

39. ஓம் மகார பதயே நமோ நம:

பொருள் : அகாரம் உகாரம் மகாரம் எனும் வியட்டிப் பிரணவமாக விளங்கும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : அ, உ, ம, எனப் பிரிந்து ஒலிப்பது வியட்டிப் பிரணவம். இவை மூன்றும் சேர்ந்து ஓம் என ஒலிப்பது சமஷ்டிப் பிரணவம். பிரணவம் பரப்பிரம வடிவானது. இருவகைப் பிரண வங்களுக்கும் முருகப்பெருமானே தலைவன். எல்லா உயிர்களையும் அறுமுகப்பெருமானிடம் சேர்த்தலால் பிரணவம் என்று பெயர் பெற்றது. எல்லா வித்தைகளுக்கும் எல்லா மந்திரங்களுக்கும் முதலாயுள்ளது. திருவைந் தெழுத்து நீங்கலாக ஏனைய மந்திரங்கள்

யாவும் பிரணவத்தை முதலாகக் கொண்டு இயங்கப்பெறும். அதனுல் அறிவுடையோர் இதனை மகாமநு, சிவமந்திரம் என்று கூறுவர்.

இப்பிரணவம் முத்தியை விரும்புவோரால் தியானிக்கப்படும் ஒன்று. எட்டு அங்கங்களையும், நான்கு பாதங்களையும், மூன்று தானங்களையும், ஐந்து தேவதைகளையும் உடையது. பிரணவத்தின் மூன்றெழுத்தியல்பு வாக்கு மனங்கட்கு எட்டாது.

அகாரத்தின் இயல்பு : அ = திறத்தல். படைத்தல், பிருதிவி, உதாத்தம், இறந்தகாலம், சுத்தாசுத்த தத்துவம், சகலநிலை, பொன்னிறம், இராசதகுணம், சொப்பனவத்தை, இருக்குவேதம், காருகபத்தியம், காலைப்பொழுது, பிரமநாடி, அக்கினிமண்டலம் என்னும் இவை அதன்கண் உணரத்தக்கன.

உகாரத்தின் இயல்பு : உ=குவிதல். காத்தல், அந்தரம், அநுதாத்தம், நிகழ்காலம், சுத்ததத்துவம், சுத்தநிலை, வெண்மை நிறம், சாத்துவிககுணம், சாக்கிராவத்தை, யசுர்வேதம், ஆகவனீயம். உச்சிப்போது, பிங்கலைநாடி, சூரியமண்டலம் என்னும் இவை அதன்கண் உணரற்பாலன.

மகாரத்தின் இயல்பு : ம=மூடுதல். அழித்தல், சுவர்க்கம், சுவரிதகம், எதிர்காலம், அசுத்ததத்துவம், கேவலநிலை, கருமைநிறம், தாமதகுணம், சுழுத்தி அவத்தை, சாமவேதம், தக்கிணுக்கினியம், மாலைக்காலம், இடைநாடி, சந்திரமண்டலம் என்னும் இவை அதன்கண் உணரற்பாலன.

இருக்குவேதம் அகர வடிவாயிருத்தலால் இந்த அகரம் என்னும் முதல் மாத்திரையை உபாசிக்கின்றவர் விவேக ஞானம் பெற்று மேலான மானிடப்பிறவியை எடுத்து

அதன்கண் சிவஞானமடைந்து முத்தியை அடைதல் திண்ணம். மந்திரவடிவான யசுர்வேதம் உகார வடிவமாயிருக்கும். உகாரமகாரங்களைத் தியானிப்பவர் சந்திரலோகம் அடைவர். அகார உகார மகாரமாகிய மூன்று மாத்திரைகளையுமுடைய பிரணவத்தை உபாசிப்பவர் சூரியனது ஒளிமண்டலத்தை அடைந்து பாம்பு பழைய தோலினின்றும் விடுபட்டாற்போலப் பாவத்தினின்றும் விடுபட்டுப் பரமுத்தி அடைவர்.

பிரணவம் ஆருகவும் ஏழாகவும் வகைப்படுத்தப்படும். அ, உ, ம, நாதம், விந்து, சத்தி என்பன அறுவகை. இவற்ருேடு சாந்தம் என்பதைக் கூட்டிக்கொள்ள ஏழு வகையாகும். ஆறுவகையில் சத்தி என்பது முருகப் பெருமானின் வேற்படை. ஏனைய ஆறும் அவனுடைய ஆறு திருமுகங்களாய் அமர்ந்தன.

பிரணவ சொரூபனுன் அறுமுகனே அகார உகார, மகாரப் பிரணவத்தின் தலைவன் என்பது விளங்கும்.

மேற்கோள் :

> ''ஓம்பெறும் பிரணவாதி உரைத்தெந்தனை—ஆள்வாய்''
> ''ஓம் என் எழுத்துக்கு உயிர்ப்பு மென்சுடர்—
> ஒளியோனே.''
>
> —திருப்புகழ்.

40. ஓம் விகாச பதயே நமோ நம :

பொருள் : எங்கும் நிறைந்துள்ள இறைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : விகாசம்—மலர்ச்சி; மாயையின் செயலான தோற்றம் ஒடுக்கம் எனும் இரண்டனுள் விகாசம் என்பது தோற்றத்தைக் குறிக்கும்.

> ''வீவிலா மாயை இதற்கிரு தருமம் சங்கோச விகாசமாமே'' என்ற சூத்திரமும் இக் கருத்துக்குச் சான்ருகும். முருகப் பெருமான் அணுவுக்கும் அணுவாயும் பெரிதினும் பெரிதாயும் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிருன். மாயையின் தோற்றமான பிரபஞ்சம் முழுவதும் அவனுகவே இருக்கின்ருன். முருகப் பெருமான் சருவேசன். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டும் அவன் விசுவத்திருமேனியில் பெறப்படுகின்றன. அதனுல் அவன் எங்கும் நிறைந்திருக்கிருன் என்பது விளங்கும். சருவ அண்டங்களும் அவன் திருமேனியிலே தோன்றி அதனிடத்திலேயே ஒடுங்குகின்றன என ஸ்காந்தம் கூறுகிறது. தோற்றமான மாயையைக் கடந்து நிறைந்துள்ளவனே முருகன்.

கணத்திற்குக் கணம் மாறுபாடு அடைவது மாயை. பிரபஞ்சம் மாறுபாடு அடைந்தவண்ணம் இருக்கின்றது. பிறப்பு, வளர்தல், இறத்தல், எல்லாம் மாயை. சீவ கோடிகள் அனைத்தும் மாயை. காலம் மாறிக்கொண்டே இருப்பதால் அதுவும் மாயை. இடம் என்று சொல்லப் படும் அளப்பரிய அண்டகோடிகளும் பிரளயத்தில் ஒடுங்கிவிடுவதால் அவையும் மாயையே. காரண காரிய செயல் எடுத்திருப்பதும் மாயையே. மாயையின் தோற்றம் அனைத்திற்கும் இகம் என்று பெயர். இகம் எங்கும் நிறைந் திருப்பவன் வேலிறைவனே.

பிரபஞ்சத்தைத் தன்னிலிருந்தே படைப்பதால் அதில் அவன் நிறைந்திருப்பது இயல்பே. இறைவன் தன்

மாத்திரைகளிலிருந்து முதலில் ஆகாயத்தைப்படைக்கின்றான். ஆகாயத்திலிருந்து காற்றையும், காற்றிலிருந்து நெருப்பையும், நெருப்பிலிருந்து நீரையும் நீரிலிருந்து நிலத்தையும் படைக்கின்றான். ஒவ்வொரு பூதத்தையும் படைக்கும்போது, அப் பூதத்தின் பாதியை எடுத்துக் கொண்டு மற்ற நான்கு பூதங்களிலிருந்து அரைக்கால் அரைக்கால் பகுதியைச் சேர்த்துக்கொண்டு படைக்கின்றான். இவ்வாறு படைக்கப்படுவதால் ஒவ்வொரு பூதத்திலும் அரைப்பகுதி மற்ற பூதங்களின் கூறுகள் கலந்திருக்கின்றன, ஐம்பூதங்களின் பல்வகைச் சேர்க்கையால் அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்தும் படைக்கப்பெறுகின்றன. இவை எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவன் மாயை அல்லன்; மாயையைத் தோற்றுவிப்பவனே. அவனே விகாசியான முருகன்.

மேற்கோள் :

''வீவிலா மாயை இதற்கிரு தருமம் சங்கோச
விகாசமாமே''

—வேதா சூ. 60

''தஸ்யதேஷ ஸமுத்யத்திம் யாந்த்யண்டா நிபுநர்லயம்''

—ஸ்காந்தம்.

''பஞ்சீக்ருத மஹாபூத ஸம்பவம் கர்மஸஞ்சிதம்
சரீரம் ஸுகதுக்காநாம் போகாயத நமுச்யதே.''

—ஆத்மபோதம் சூ. 12

41 ஓம். ஆதி பதயே நமோ நம:

பொருள் : எல்லாவற்றிற்கும் முதற் காரணமாகிய தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் : ஆதி—மூலகாரணன்; முதற்பொருள்.

பிரமா, விட்டுணு, உருத்திரர் என்னும் மும்மூர்த்திகளுக்கும் வேறான சங்கார காரணரே மூலகாரணர்; முதற்பொருள். சங்காரமாவது அழித்தல். அழித்தலாவது தூலநிலையில் உள்ளதைச் சூக்கும நிலையிற்படுத்து ஒடுக்குதல். படைத்தல் என்பது சூக்குமநிலையில் ஒடுங்கியிருப்பதைத் தூலநிலைக்குக் கொண்டுவருதல். காத்தலாவது தூலநிலையில் உள்ளதை நிலைநிறுத்தல். சூக்குமம், முன்னே உள்ளது; சிறியது; நிலையில்லாதது ஆகும். அந்நிலையில் அழித்தல் சூக்குமத் தொழிலாகலின் அத்தொழிற்குத் தலைவன் காரணமும், முன்னே உள்ளவனும், பெரியவனும் நிலையானவனுமாவான். தூலத்திற்குத் தலைவர் காரியரும் பின்னே தோன்றுவோரும், சிறியவரும், நிலையில்லாதவருமாவர். ஆகையால், காரணனாகிய அழித்தற் கடவுள் தொழிற்படுத்தும் தலைவனாகவும், காரியராகிய ஏனையோர் அவனால் தொழிற்படுத்தப்பட்டும் அவன் ஏவல் வழி நிற்பவருமாவர். சங்காரத் தொழிலை நடத்தும் குணருத்திரன் மும்மூர்த்திகளுள் ஒருவன் ஆவன். இவனினும் மேலானவரும் வேறானவரும் மகாருத்திரன் என்றும் பரமசிவம் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இவர் தாம் நடத்தவேண்டிய ஐந்து தொழில்களையும் நடத்துவதற்கு பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் எனும் ஐந்து மூர்த்திகளையும் படைக்கின்றார். படைக்கப்பட்ட இம் மூர்த்திகள் மகாபிரளயத்தில் படைத்தவனிடத்தில் ஒடுங்கிவிடுகின்றனர். இப்படி ஒடுங்குவதால் எல்லாத் தேவர்களும் பசுக்களே (ஆன்மாக்கள்). எக்காலத்தும் அழியாமலிருப்பவனும் எல்லாம்

தோன்றுவதற்கு மூலகாரணமாய் இருப்பவனும் மகா ருத்திரனுன அறுமுகச்சிவனே. அதனுல்தான் சூரசங்கார மூர்த்தியாகவே அவர் தோன்றுகின்ருர்.

மேற்கோள் :

''மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி''

—கந்தபுராணம்.

''சங்காரமே முதல்''
''அந்தம் ஆதி''

—சிவஞானபோதம்

''மூவரும் முப்பத்து மூவரும் மற்ருெழிந்த
தேவரும் காணுச் சிவபெருமான்''
''ஆதி குணம் ஒன்றுமிலான்
அந்தமிலான் வரக்கூவாய்''

—திருவாசகம்.

''மூலமும் முடிவும் இல்லாத மூர்த்தியை''

—கந்தபுராணம்.

42. ஓம் பூதி பதயே நமோ நம:

பொருள்: சகல ஐசுவரியங்களுக்கும் தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம்: பூதி—செல்வம்.

கந்தக் கடவுள் எல்லாச் செல்வங்களுக்கும் தலைவன். அதனால் அவன் பரம ஐசுவரிய மூர்த்தி என்று அழைக்கப் படுகிறான். அவனே அளவற்ற உருத்திரகோடிகளில் மகாசங்காரகாரண உருத்திரன்; பலகோடி விட்டுணுக் களில் மகாவிட்டுணு; நான்கு மூர்த்திகளில் வாசுதேவ மூர்த்தி; அவனது பத்துப் பிறவிகளில் சீராமன்; ஆயுதம் தரித்த யாதவர்களில் வாசுதேவன்; பாண்டவர்களில் அருச்சுனன்; பிரஜாபதிகளுக்குள் பிரமன்; மனுக்களுள் சுவாயம்புவமனு; தேவர்களுக்குள் இந்திரன்; ஒளிப் பொருளுள் அக்கினிதேவன்; பிதுர்களில் யமன்; இராக்கதரில் நிருதி என்னும் திக்குப் பாலகன்; சலசரீரிகளில் வருணன்; கந்தருவரில் சித்திரரதன்; செல்வங்களில் குபேரன். திக்குப்பாலகர்களில் வடகிழக்குத்திசைப் பாலகனான ஈசானன்; எட்டுத்திசை யானைகளில் கிழக்குத்திசை யானையாகிய ஐராவதம். யானைகளில் இவன் பிணிமுகம்; நதிகளில் இவன் கங்கை; பதினோரு உருத்திரர்களில் இவன் சங்கரன்; எண்வகை வசுக்களுள் இவன் பாவகன்; பன்னிரு சூரியர்களுள் இவன் விட்டுணு என்னும் சூரியன்; மருத்துவர்களில் இவன் அசுவினிதேவர்; அசுரர்களில் இவன் பிரகலாதன்; சர்ப்பங்களில் வாசுகி; விலங்குகளில் சிங்கம்; பறவைகளில் கருடன்; குதிரைகளில் உச்சைச் சிரவம்; பசுக்களில் காமதேனு; முனிவர்களில் வசிட்டர்; கிருத்தியங்களுள் அருள்புரியும் செயல்.

தேவ முனிவர்களுள் இவன் நாரதன்; அரச முனிவர் களில் விசுவாமித்திரன்; வேளாள முனிவருள் சூதமுனி;

அக்கினியுள் சிவாக்கினி; மந்திரங்களுள் பஞ்சாட்சரம்; மணிகளுள் உருத்திராக்கம்; மலைகளுள் மேருமலை; மரங்களில் அரசமரம்; மனிதருள் பிரமஞானம் வாய்ந்த அந்தணன்; அந்தணருள் ஆதிசைவப் பிராமணன்; வித்தைகளுள் பரவித்தை எனப்படும் சிவாகமங்கள்; தேவமணிகளுள் சிந்தாமணி; யோகங்களுள் அட்டாங்கயோகம்; மிருகங்களுள் பசுக்கள்; நவகண்டங்களுள் பரதகண்டம்; வாக்கிகளுள் வியாழபகவான்; சாரதிகளில் பிரமன்; குருவடிவங்களுள் தக்ஷிணாமூர்த்தி; மாதங்களுள் ஆவணி; சிவாகமங்களுள் ரௌவர ஆகமம்; பொய்கைகளுள் சரவணப் பொய்கை; கடலுள் பாற்கடல்; அறநெறியுள் சத்தியம்; பருவங்களுள் இளவேனில்; மலர்களுள் தாமரை; அணிகளுள் மேகலை; ஞானங்களுள் சிவஞானம்; ஆச்சிரமங்களுள் சந்நியாசம்; சூத்திரங்களுள் சிவஞான போத மகாசூத்திரம்; இவ்வாறு எல்லா ஐசுவரியங்களும் முருகப் பெருமானே எனப் புவனேசுவரிக்குச் சிவபெருமான் தொகுத்துக் கூறினார். ஆகையால் அறுமுகன் 'பூதி பதயே' எனப் போற்றப் பெறுகிறான்.

மேற்கோள் :

'பூதி தரும் லிங்க பூசனை'

—காஞ்சிப்புராணம்.

பூதி செல்வம்—(பிங்கலநிகண்டு)

சீரும் போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கருள
வல்லான்.

—கந்தபுராணம்.

43. ஓம் அமார பதயே நமோ நம :

பொருள் : மாரனை எரித்த தலைவனுக்கு வணக்கம்.

விளக்கம் ; அமார—மாரனை எரித்த சிவன்.

ந+மார என்னும் வடமொழி தமிழில் அமார என வந்தது. மாரன் என்ற பெயர் மன்மதனைக் குறிக்கும். இவனைக் காமன் என்றும் சொல்வர். இவன் சிவனால் எரிக்கப்பட்ட வரலாறு கந்தபுராணத்தில் விளக்கப் படுகிறது.

சனகாதி முனிவர்கள் நால்வரும் முன்பு மறைப் பொருளைச் சிவனார் மூலம் உரைக்கப் பெற்றனர். பின்பு ஆகமங் கூறும் முப்பொருள் உண்மையை விளங்க உணர நினைத்துச் சிவனாரை நோக்கித் தவம்கிடந்தனர். சிவனார் திருவருளால் கயிலையில் நந்திபெருமான் காக்கும் வாயில் வழியே சென்று பெருமானைத் தொழுதனர். அவர்கள் பெருமானிடத்தில், அழிவில்லாத ஆகமத்தின் அரும்பதம் மூன்றும் கூற 'மனம் ஒடுங்கும் ஞான போதகத்தைப் போதித்தருள்க, என வேண்டினர். மாலும் அயனும் அறியாத பெருமான் தமது திருமார்பில் திருக்கரத்தை வைத்து மோன முத்திரையைக் காட்டி ஒரு கணம் செயல் ஒன்றும் இல்லாமல் யோகநிலையில் இருந்தார். அந்த முனிவர்களுக்கு ஞானத்தை உணர்த்தச் சிவனார் கொண்ட ஒருகண மோன நிலை பிரமன் முதலிய தேவர்களுக்குப் பற்பல யுகங்கள் ஆயின. உலக உயிர்கள் அனைத்தும் உடற்கலப்பு என்னும் இன்பத்தில் ஆர்வம் இழந்தன. இந்நிலைக்கு இந்திரன் அஞ்சினான். சூரனைக் கொல்ல உமையவள் ஒரு குழந்தையைத் தர முடியாதே என்று நினைத்தான். பிரமனிடம் சென்று உரைத்தான். பிரமன்

இந்திரன் யாவரும் திருமாலிடம் சென்று வணங்கினா. அவர் சிவனுர் மோனத்தைக் கலைக்கக் காமனை ஏவச் சொன்னுர்.

பிரமன் தனது உலகத்திற்கு வந்தார். காமனை அழைத்தார், சிவனுர் மீது அம்புவீசி மோனத்தைக் கலைக்கச் சொன்னுர். ''வேறு ஏதேனும் சொன்னுல் செய் வேன். இதைச் செய்யமாட்டேன்'' என்று கூறிக் கட்டளையை ஏற்க மறுத்தான். ''செய்தால் பல வரங் களையும் செய்ய மறுத்தால் சாபத்தையும் தருவேன்,'' என்று பிரமன் வெகுண்டு கூறினுர். உனது சாபத்தால் துன்பப்படுவதைவிடச் சிவனுரால் கொல்லப்படுவதே நன்மையைத்தரும் என்று சொல்லிப் பிரமன் கட்டளையை நிறைவேற்றுவதாகக் கூறிச் சென்ருன். கயிலை மலை சென்று மிகுந்த அச்சத்தோடு சிவனுர்மீது மலர் அம்புகளை வீசினுன். அவர் சிறிதளவு நெற்றிக்கண்ணைத் திறந்தார். காமன் எரிந்து சாம்பலானுன்.

காமத்தை வென்றவரும் யோகிகளுள் மகாயோகியு மானவர் சிவபெருமானே. அடியார்களுடைய பொல் லாத பகைகளான காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற தீக்குணங்களை எரித்துக் காப் பவன் சிவபெருமானே.

ஐந்து முகச் சிவமே ஆறுமுகச் சிவமாகத் தோன்றிய தால் காமனை எரித்த நிகழ்ச்சி ஆறுமுகப் பெருமானுக்கும் பொருந்தும் என்பதால் சுவாமிகள் அறுமுகனை அமார பதயே என வணங்குகின்ருர்கள்.

43. ஓ[illegible]

விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டதும் சிறிதே வேளைப் பார்த்தனன். பார்த்தலோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது; கயிலை முற்றும் சூழ்புகை பரவிற் றன்றே.''

—கந்தபுராணம்.

''கால காலப்ரபுச் சாலுமா லுற்றுமைக்
காகவே ளைப்புகக் கழுநீராற்
காதும்வே ழச்சிலைப் பாரமீ னக்கொடிக்
காமவேள் மைத்துனப் பெருமாளே.''

—திருப்புகழ்.

''அனங்க ஹைந்து நைந்து வெந்து குந்து சிந்த அன்று கண்தி
றந்திருண்ட கண்டர் தந்த—அயில்வேலா''

—திருப்புகழ்.

44. ஓம் குமார பதயே நமோ நம:

பொருள் : குமாரனுகிய பிரானுக்கு வணக்கம்.

விளக்கம் : குமரன் என்பது குமாரன் எனவும் வரும். இதற்கு அரன்மகன் என்பது பொருள். தனக்குத் தானே மகனுகிய தற்பரன் அல்லவா? குமாரன் என்பது இளம்பிராயமுடையான்

என்ற பொருளைத் தருவதால் 'பிரமசாரி' என்று குறிக்கும். சம்பவ காண்டம் 1-வது அத்தியாயத்துப் 10-வது சுலோகத்தில், ''ப்ரஹ்மசாரி'' எனவும் சண்முகனைக் கூறு கின்றது. இதனால் குமாரக்கடவுளின் தேவி யர்களான வள்ளியையும் தெய்வயானையையும் நித்திய கன்னிகள் என்று அறிய வேண்டும். அதனால்தான் சிவஞான சித்தியாரில், சிவம் சக்தியை ஈன்றான். சக்தி சிவத்தை ஈன்றாள். மனம் மகிழ்ந்து இருவரும் கூடினர். உலகு களையும். உயிர்களையும் ஈன்றனர் என்றும் ''சிவன் என்றும் பிரமசாரியாகவும் சத்தி என்றும் கன்னியாகவும் இருக்கின்றனர்'' என 2-ஆம் சூத்திரம் விளக்குகின்றது. இறைவ னுடைய பிரமசரிய நிலையை ஞானிகள் உணர்கின்றனர். முருகன் என்றும் 'இளமைக் காரன்' என்று அருணகிரியார் பாடுவதும் காண்க.

சுவாமிமலை என்னும் திருவேரகத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகனை ஒழுக்கத்தில் சிறந்த அந்தணர்கள் ஈரம் புலராத ஆடையுடுத்துத் தலைமேற் கையைச் கூப்பிக் ''குமாராய நம'' எனும் ஆறெழுத்து மந்திரத்தை ஓதுவர். அதனைக் கேட்டு முருகன் அங்கு உவந்திருப்பான். அதனால் குமாராய நம என்பது சடக்கரமந்திரம் ஆகும் என அறிக.

சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்குமுன் ''நாதா குமரா நம'' என்றுதான் துதித்தான். சடக்கர யந்திரத்தில் குமர என்பது இடையில் அமையும்.

கு—அருவருப்பு, குற்சிதம் என்றும், மாரன்—நாசம் செய்பவன் என்றும் வடநூலார் பொருளாக்குவர்.

அதனுல் குமாரன் என்பதற்கு ஆன்மாக்களின் பந்தபாசங் களைக் கெடுத்து அருள்பவன் என்று பொருள் கொள்ளப் படும்.

மேற்கோள் :

குமரசரணம் சரணம் என்று அண்டர்குழாம் துதிக்கும்
அமராவதியிற் பெருமாள்.

—கந்தரலங்காரம்.

குமரசர ணென்று கூதளப்
புதுமலர் சொரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற்—றுணர்வேனே.

—திருப்புகழ்.

குமரா நம என்று கூறினுர் ஓர்கால்
அமரா வதிசென் றரசாள்வர்—எமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்.

—திருப்போரூர்ச்சந்நிதி முறை.